## ஆசிரியர் கடிதம்

# சின்னத்திரையா? சிந்தனைச் சிறையா?



## என் எண்ணம்

- எம்.எஸ்.மூர்த்தி

அன்புடையீர் வணக்கம்.

நமது "மித்ரா டைம்ஸ்" மாத இதழ் புதுப்பொலிவுடன், பல்வேறு சிறப்புப்பகுதிகளைக் கொண்டு வண்ணப்பக்கங்களுடன் வெளிவருகிறது. நமது இதழை படித்துவிட்டு தங்களது கருத்துக்களை எங்களுக்கு தொலைபேசி வாயிலாகவும், கடிதம், இமெயில் மூலமாகவும் பாராட்டியுள்ளீர்கள். மேலும் தவிர்க்க வேண்டிய விஷயங்களையும், சேர்க்க வேண்டிய அம்சங்களையும் குறிப்பிட்டுள்ளீர்கள். நமது இதழில் வளர்ச்சிக்கு தங்கள் ஆலோசனைகள் பெரிதும் உதவிடும் என்பதால், அவற்றை நடைமுறைப்படுத்திடும் வகையில் எல்லா வகையிலும் ஏற்பாடு செய்து வருகிறோம். ஏனெனில் வாசகர்களே பத்திரிகையின் ஆயுளை கணிப்பவர்கள் என்பதை நாங்கள் நன்கு அறிவோம்.

"ஆடிப்பாடி வேலை செஞ்சா அலுப்பிருக்காது, அதில் ஆணும் பொண்ணும் சேராவிட்டால் செழிப்பிருக்காது" என்று ஒரு சினிமா பாட்டு உண்டு. மனிதன் கடுமையாக உழைத்து களைத்துப் போகும் வேளையில் சற்று இளைப்பாற உதவிடுவதுதான் ஆட்டம், பாட்டம். முதலில் தெருக்கூத்தாக தொடங்கி மேடைநாடகம், சினிமா என படிப்படியாக வளர்ந்த மனிதனின் பொழுதுபோக்கு தொலைக்காட்சிக்கு மாறியது.

தொலைக்காட்சி என்பது 30 ஆண்டுகளுக்கு முன்பு தூர்தர்ஷன் என்ற தொலைக்காட்சிதான் எல்லோருக்கும் அறிமுகம். அப்போது ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணி முதல் 8.00 மணிவரை "ஒளியும் ஒலியும்" என்ற திரைஇசைப்பாடல் காட்சி போடுவார்கள். கறுப்பு வெள்ளை டி.வி.யில் பார்த்தோம். அதற்கு ஏகப்பட்ட வரவேற்பு. ஞாயிறுதோறும் மாலை 5 மணிக்கு ஒரு திரைப்படம் போடுவார்கள். தொலைக்காட்சி எல்லோரும் வாங்காத காலகட்டத்தில் முக்கியமான வீடுகளில் மட்டுமே இருக்கும். ஒளியும் ஒலியும் பார்க்க 0.25 பைசா சினிமா பார்க்க 1.00 என்று கொடுத்து தொலைக்காட்சி வைத்திருக்கும் வழி இல்லாதவர்கள் பார்ப்பதுண்டு.

அறிவியல் வளர்ச்சி காரணமாக பின்னாளில் அரசே இலவச வண்ணத்தொலைக்காட்சி வழங்கிய பின்பு தொலைக்காட்சி இல்லாத வீடுகளே இல்லை என்று சொல்லுமளவுக்கு வளர்ந்தது. வரவேற்பறைக்கு வந்து நம்மை வசப்படுத்திய தொலைக்காட்சியை சின்னத்திரை என்றே அழைத்தனர். வீடுகளில் சின்னத்திரை தொலைக்காட்சி என்றால் வெளியில் கணினி, ஆன்ட்ராய்டுபோன், டச் போன் என அவையும் சின்னத்திரையாகவே கருதப்பட்டது. இன்றைக்கு சின்னத்திரையின் வளர்ச்சி அபரிதமானதாக உள்ளது.

அடித்தட்டு மக்கள் பயன்படுத்துகின்ற தொலைக்காட்சி வருமானம் அதிகமுள்ளவர்கள் கூட வைத்திருப்பதில்லை. நாலைந்து நிறுவனச் சேனல்களை மாற்றி மாற்றி பார்த்துக்கொண்டு வேலைக்கே

செல்லாமல் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

அறிவியல் நோக்கில் காணப்படும் இந்த வளர்ச்சி தனிமனிதனின் வாழ்க்கையையே தலைகீழாக புரட்டிப் போட்டுவிட்டது. குடும்பத்தில் பெண்கள் சீரியலில் ‘சீரியஸாக’ மூழ்கி விட்டார்கள். தங்கள் வீட்டில் நடைபெற வேண்டிய திருமணம், வளைகாப்பு நிகழ்ச்சிக்கு தர வேண்டிய முக்கியத்துவத்தைவிட தெய்வமகளில் காயத்ரிக்கு டைவர்ஸ் கிடைக்குமா? குமாரோடு சேர்வாளா? நம்பியுடனான தொடர்பு துண்டிக்கப்படுமா! என பெண்களின் கவலை முடங்கிப்போய்விட்டது. மதியம் 11.30க்கு தொடங்கி இரவு 10.00 மணிக்கு வாணி ராணி வரை நீண்டு விடுகிறது. அதிலும் ஒரு நாளைக்கு அரைமணி நேரத்தில் கால் விளம்பரம் போக முன்தினம் போட்டதையே மறுபடியும் கொஞ்சம் போட என்று ஒரு எபிஷோடு 13 நிமிடம் மட்டுமே வருகிறது. இந்த மாதிரியான சீரியல்களை 1000 எபிஷோடு வரைகூட ஒளிபரப்பாகிறது. அதாவது ஐந்து வருடங்களுக்கு ஓடிக்கொண்டிருக்கிறது.

சரவணன் மீனாட்சி என்ற சீரியலில் 3வது ஜோடிக்கான கதை ஓடிக் கொண்டிருக்கிறது. சீரியல்கள் பார்ப்பதில் தவறில்லை. அதையே சீரியஸாக பார்த்துக் கொண்டிருப்பது தான் தவறு. இப்படி சீரியலில் தங்கள் வாழ்க்கையை பெண்கள் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல லேப்டாப் மற்றும் போன் கையில் வைத்திருக்கும் பிள்ளைகள் போனில் மூழ்கி பக்கத்தில் உள்ளவர்களைக்கூட பார்க்காமல் காதில் ஒயரை சொருகிக்கொண்டு ராமன் ஆண்டாலென்ன? ராவணன் ஆண்டாலென்ன? ராம்குமார் செத்தாலென்ன? ராணுவத்தில் செத்தாலென்ன? என்கிற போக்கில் வலம் வருகிறார்கள். யாராவது ஏதாவது கேட்டால் ஒரு கையில் காதில் உள்ள ஒயரை விடுவித்து “புரியல” என்ன? என்கிறார்கள். நாம் சொல்வதைக் கேட்டு ‘தெரியல’ என்று சொல்லிவிட்டு மீண்டும் ஒயரை காதில் சொருகிக் கொள்கிறார்கள்.

இப்படி சின்னத்திரையில் ஏற்பட்ட கவனச் சிதறலால் நமது சிந்தனைகள் சிறைபட்டு இருக்கிறது. சின்னத்திரையிலிருந்து சற்று விலகி சிந்தனைச்சிறையை உடைப்போம்! உலகையும் சற்று உற்று நோக்குவோம்!

---


# மித்ரா டைம்ஸ்

**மாத இதழ்**

மித்ரா 2 அக்டோபர் 2016 டைம்ஸ் 5

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தியாசிரியர்
**தம்பி முருகானந்தம்**
**9381788645**

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

மாவட்ட செய்தியாளர்கள்
**திண்டுக்கல் முபாரக்**
**சேலம் பிரவீன்குமார்**
**திருப்பூர்** R. **அருண்**

**வடிவமைப்பு**
**மித்ரா டிசைன்ஸ் 23743007**

விற்பனை, விளம்பரம், சந்தா
**23743007/8**



## அலுவலக முகவரி

602, ஸ்ருதி பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு,
சென்னை94.
போன் : 044-23744661,23743007/8

**Whatsapp No. 9841843773**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**

# உள்ளே...


| | |
|---|---|
| திருப்பதி பிரம்மோற்சவம் | 6 |
| அற்புத மூலிகைகளின் மலை | 7 |
| பலகைகளில் எழுத்துக்களை செதுக்க 16 ஆண்டுகள் | 9 |
| காலத்துக்கும் பொருந்தும் கண்ணதாசன் சிந்தனைகள் | 10 |
| நீங்களே தயாரிக்கலாம் வாங்க! | 11 |
| விடுதலைப் போராட்டத்தில் காந்திக்கு எதிராக லால்-பால்-பால் | 12 |
| மாண்புமிகு அமைச்சர் பாண்டியராஜனின் உழைப்பும் திறமையும் | 14 |
| ராசிப் பலன்கள் | 16 |
| அம்மாவுக்கு கடிதம் | 17 |
| கைவண்ணம் | 18 |
| புற்றுநோயைத் தீர்த்து வைக்கும் கற்கடேஸ்வரர் | 19 |
| விளம்பரம் பார்த்து மனை வாங்கப் போறீங்களா? | 20 |
| மாணவர்கள் பக்கம் | 22 |
| நோயை வெல்வோம்! | 23 |
| செல்லாத காசோலை தந்த செல்வாக்கு | 24 |
| மித்ரா சினி கோலிவுட் | 26 |
| நீங்களும் நிர்வாகியாகலாம் | 28 |
| உலகத்தை ரசிங்க! அனுபவிங்க! சிரிங்க! | 29 |
| சினிமா மார்க்கண்டேயன் சிவக்குமார் | 30 |
| கபாலிகான் நியூஸ் | 32 |
| நான் சிரித்தால் தீபாவளி ஹோய்! | 34 |
| ஆடு ஆடு ஜமுனாபாரி ஆடு | 36 |
| இட்லிகளில் இத்தனை வகைகளா? | 37 |
| நஞ்சற்ற உணவே நோயற்ற வாழ்வு | 38 |
| EnGLISH | 40 |
| பெண்களுக்கு வேலைவாய்ப்பு தரும் பேஷன் டெக்னாலஜி | 42 |
| எழில் கொஞ்சும் பிச்சாவரம் | 44 |
| கமிஷனர் ஜார்ஜ் | 46 |
| எம்-பதில்கள் | 48 |
| சென்னை நெருக்கடியில் சிக்கித் தவிப்பவரா நீங்கள் | 50 |




















ஆன்மிகம்



# திருப்பதி பிரம்மோற்சவம்

ஏழு மலை நின்று எல்லோரையும் காக்கும் தெய்வமாம் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஆண்டுதோறும் பிரம்மோற்சவ விழா வெகு விமர்சையாக நடைபெறும். இந்த ஆண்டிற்கான பிரம்மோற்சவ விழா, அக்டோபர் 2ம் தேதி முதல் 11ம் தேதி வரை நடைபெற உள்ளது.

ஆந்திர மாநிலம் திருப்பதி திருமலையில் உள்ள ஏழுமலையானை தரிசிக்க தினசரி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

பிரம்மோற்சவ நாட்களில், பல லட்சக்கணக்கான பக்தர்கள் திருமலையில் கூடுவார்கள் என்று எதிர்பார்ப்பதால், பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பறை, இலவச உணவு மற்றும் இலவச சிகிச்சை போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. பிரம்மோற்சவ காலத்தில் சாதாரண பக்தர்களும் ஏழு மலையானை எளிதாக தரிசிப்பதற்காக ஏற்பாடுகள், போக்குவரத்து வசதி, தங்குமிடம் ஆகியவையும் எவ்வித குறைபாடின்றி மேற்கொள்ளும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது குறித்து கோவில் அதிகாரி சாம்பசிவராவ் செய்தியாளர்களிடம் பேசினார்.பிரம்மோற்சவத்தை முன்னிட்டு அக்டோபர் 2ம் தேதி முதல் 11ம் தேதி வரை ஆர்ஜித சேவைகள் ரத்து செய்யப்படுகிறது. அதேபோல் முதியவர்கள், மாற்று திறனாளிகள், கைக்குழந்தை வைத்திருப்பவர்களுக்கான சிறப்பு தரிசனமும் ரத்து செய்யப்படுகிறது. நடைபாதை வழியாக வரும் பக்தர்களுக்காக அனைத்து வசதிகளுடன் கூடிய காம்பளக்ஸ் விரைவில் கட்டப்பட உள்ளன. 300 ரூபாய் ஆன்லைன் மூலம் 2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2016ம் ஆண்டு ஜூலை மாதம் வரை 57 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர்.

ஆந்திராவை சேர்ந்தவர்கள் 24.77 சதவீதமும், கர்நாடகத்தை சேர்ந்தவர்கள் 14.75 சதவீதமும் தரிசனம் செய்துள்ளனர். அதேபோல் மலேசியா, அமெரிக்கா, இலங்கை, சிங்கப்பூர், இங்கிலாந்து, அரபு நாடுகள் உள்ளிட்ட வெளிநாட்டை சேர்ந்தவர்கள் 8 ஆயிரத்து 464 பேர் சாமி தரிசனம் செய்துள்ளதாக சாம்பசிவராவ் கூறியுள்ளார்.

இதில் அதிகபட்சமாக தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் 32.4 சதவீதம் தரிசனம் செய்துள்ளனர்.

எம்.எஸ்.எம்.

## அற்புத மூலிகைகளின் மலை

# கொல்லிமலை

**ஏற்கனவே நமது மித்ரா டைம்ஸ் மாத இதழில் கொல்லிமலையின் சிறப்புகள் குறித்து பார்த்தோம். அதன் தொடர்ச்சி...**

**வரலாற்றுக் குறிப்புகள் :** பழந்தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவற்றில் கொல்லி மலையைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. கொல்லிப்பாவையின் வரலாறு சங்க நூல்களில் வேறு விதமாகக் காணப்படுகிறது.

இம்மலையும் இதைச் சார்ந்த கிராமத்தையும் சுமார் கிபி 200ல், ஓரி என்ற அரசன் ஆட்சி புரிந்ததாக வரலாறுகளில் காணப்படுகிறது. இவனது மகள் தான் கொல்லிப்பாவை. இவள் அழகில் சிறந்தவள். புறனானூற்றில் இவளைப் பற்றி பல பாடல்களில் சிறப்பாக கூறப்பட்டுள்ளது.

வரலாற்று சிறப்பு கொண்ட கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி கொல்லிமலையை முன்பு ஆட்சி செய்தான். சேரனின் ஆட்சி பிடியில் இருந்து விடுபட்டு கொல்லிமலையை வல்வில் ஓரியும், முசிறியை ஆண்ட கழுவுள், தகடூரை ஆண்ட அதியமான் ஆகிய மூன்று பேரும் தனி ஆட்சி செய்தனர்.

ஓரி என்பதற்கு தேனின் முதிர்ந்த நிறம் என்று பெயர். இந்த நிறமுடைய குதிரையை இவன் பெற்று இருந்ததால் இவனுக்கு ஓரி என்ற சிறப்புப் பெயர் கிடைத்தது. இவனுடைய இயற்பெயர் ஆதன். வில் எய்வதில் சிறந்தவன் ஆக விளங்கியதால் வல்வில் ஓரி என்று அழைக்கப்பட்டான். ஒரே அம்பில் யானை, புலியின் வாய், மானின் உடல், காட்டுப் பன்றி, உடும்பின் தலை ஆகியவற்றை துளையிட்டு, 5 விலங்கினங்களைக் கொன்றான் என்ற சிறப்பே வல்வில் ஓரி என்ற பெயர் நிலைக்க காரணமாயிற்று. வல்வில் ஓரியின் திறனைப் புகழ்ந்து பல பாடல்கள் உள்ளன.

இவன் நாமக்கல் ராசமாபுரமாகிய ராசிபுரம், கொல்லிமலை ஆகிய பகுதிகளை தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். ராசிபுரம் சிவன் கோயிலும், கொல்லிமலை அறப்பளீஸ்வரர் கோயிலும் வல்வில் ஓரி ஆட்சி காலத்தில் தான் கட்டப்பட்டவையாகும். இங்கு வல்வில் ஓரிக்கு சிலை அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இச்சிலைக்கு விழா எடுக்கப்படுகிறது. மறவர் குடியைச் சேர்ந்தவன் ஓரி என வரலாற்றுச் சான்றுகள் கூறுகிறது.

பெருஞ்சேரல் இரும்பொறை, மலையான் திருமுடிக்காரி படையுடன் வந்து வல்வில் ஓரியுடன் போரிட்டான். நீர் கூர் மீமிசை என்ற இடத்தில் நடந்த போரில் படை வலிமை குறைந்த வல்வில் ஓரி தோற்றதுடன் இறந்தும் போனான்.





பெருஞ்சேரல் ஓரியை வென்றதன் அடையாளமாக கொல்லிப் பொறையன் என்ற காசை வெளியிட்டான்.

வல்வில் ஓரியை போரில் தோற்கடித்து இறக்கச்செய்தபின் பெருஞ்சேரல் கொல்லிமலையின் உள்ளே தன் படையுடன் நுழைந்தான். ஆனால் கொல்லிமலை மக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு அவனை ஊருக்குள் விடாமல் தடுத்தனர். இதனால் தன் படைத்தலைவன் பிட்டன் கொற்றனிடம் கொல்லிமலையை ஆட்சி செய்ய ஒப்படைத்ததாக அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது.



வல்வில் ஓரியின் சாவுக்கு, அவன் உறவினனாகிய அதியமான் நெடுமானஞ்சி, சோழன் கிள்ளி வளவனுடைய உதவியைக் கொண்டு திருக்கோவலூர் மீது படையெடுத்துச் சென்று அந்த ஊரையும் அழித்தான்; மலையமானுடைய முள்ளூர் மலைக் கோட்டையையும் தரைமட்டமாக்கினான், என்று பொன்னி யின் செல்வனில் கூறப்பட்டுள்ளது.

கொல்லிமலையில் 19 கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 12 கல்வெட்டுக்கள் சோழ மன்னர்களின் கால கட்டடத்தைச் சார்ந்தவையாகும்.



இராமாயணத்தில் சுக்ரீவன் ஆண்டு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ள ‘மதுவனம்‘ எனும் மலைப் பிரதேசம் இதுவாக இருக்கக் கூடும் என்றும் சில கருத்துக்கள் நிலவுகின்றன.

காலாங்கி முனிவர் முதலாக பதினெண் சித்தர்கள் இம்மலையில் பல குகைகளில் தங்கித் தவம் செய்துள்ளனர். கொல்லிமலையின் சுற்றுலாத்தலங்கள் குறித்து அடுத்த இதழில் காண்போம்.



**எம்.எஸ்.எம்.**

மரப்பலகைகளில் எழுத்துக்களைச் செதுக்கினார்கள். கொரியாவில் இவ்விதம் செதுக்கப்பட்ட “திரிபீடகம்” என்ற புத்தரின் வரலாறு அறிவுரைகளைக் கூறும் நூல், உலகின் மிகச் சிறந்த கருவூலமாகக் கருதப்படுகிறது. பதிமூன்றாம் நூற்றாண்டில் தயாரான அது, கொரியாவில் கெய்ன்சா என்ற புத்த ஆலயத்தில் இப்பொழுதும் இருக்கிறது. மொத்தம் 81,258 மரப்பலகைகள் இருபுறமும் எழுத்துகள் செதுக்கப்பட்டு உள்ளன. அதாவது மொத்தம் 1,62,516 பக்கங்கள் பலகைகளில் விரிசல் விழாமல் இருக்க, நாலு மூலைகளிலும் பித்தளைத் தகடு பதிக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பலகைகளைச் செதுக்கி முடிக்க 16 ஆண்டுகள் ஆயின. ஒவ்வொரு பலகையும் 67 செ.மீ. உயரம், 23 செ.மீ. அகலம், 6.5 செ.மீ கனம். செதுக்கும் முன் பலகைகளை மூன்று ஆண்டுக் காலம் கடலில் ஊறப் போட்டார்கள். உப்பு ஏறுவதற்காக உப்பு ஏறினால் கரையானை தின்னாது. அச்சு தோன்றியபொழுது கூட மரப்பலகைகளில் தான் எழுத்துகளைச் செதுக்கினார்கள். முதலில் முழு முழுப் பக்கமாகப் பலகையில் செதுக்கியவர்கள், பிறகு தனித்தனி எழுத்தாகச் செதுக்கினார்கள். இன்றுங்கூடக் கொட்டை எழுத்துகளை மரத்தில் செதுக்குகிறார்கள்.

இலையை வடமொழியில் ‘பத்ரம்’ என்று சொல்லுவார்கள். அதிலிருந்து தோன்றியதுதான் பத்திரிகை. பத்திரிகை என்பது இன்று பெருவழக்காக இதழ்களைக் குறித்தாலும், எழுதிய அச்சிட்டஎல்லாமே ‘பத்திரிகை’ என்று சொல்லப்படுகிறது.

பிறப்பு பற்றிய குறிப்பு (ஜாதகம்) ‘சன்ன பத்திரிகை’ அல்லது இலக்கிணப் பத்திரிகை, நலம் விசாரித்து எழுதும் கடிதம் ‘குசலப்பத்திரிகை’ குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தில் கொடுப்பது ‘குற்றப்பத்திரிகை’ திருமண அழைப்பு ‘விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை, மரண அறிவிப்பு ‘காரியப் பத்திரிகை’. திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தில் உள்ள



ஒரு தமிழ் ஏட்டுக்கு ‘வீரபோக வசந்தராயர் மகத்துவ பத்திரிகை’ என்று பெயர். வள்ளலார் தமது அறிக்கைகளை ‘பத்திரிகை’ என்று குறிப்பிடுகிறார். ‘சங்கம் விளங்கும் காலம்’ என்ற அவரது அறிக்கை, ‘பெருமான் திருக்கரத்தால் எழுதித் தந்த பிரதம பத்திரிகை’ என்று சொல்லப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஏடும் எழுத்தாணியும்தான் பெருமளவில் பயன்பட்டன. பனை ஓலையை ஏடு என்கிறார்கள். இன்று ஏடு என்பது நூல்களைக் குறிக்கிறது. “ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணிருந்தவர்கள் மாய்ந்து விட்டார்” என்பது பாரதி பாட்டு.

ஏடுகளைச் சுவடி என்றும் சொல்லுவார்கள். கால் தடம் சுவடு வரிவடிவம் என்பது ஒலி எழுத்தின் சுவடுதானே? மண்ணில் பதிந்த கால் தடத்தைச் சுவடு என்றார்கள். எழுத்தின் சுவடும் பதிந்த ஏடு ‘சுவடி’ என்று சொல்லப்பட்டது. “இனிதினிதாய் எழுந்த எண்ணங்களையெல்லாம் இலேசாக்குவது புலவர் தரும் சுவடிச்சாலை” என்றார் பாரதிதாசன்.

உலகம் எங்கிலும் தமிழ்ச் சுவடிகள் கிடைக்கின்றன. கேரளப் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகளில் காலத்தால் பிந்தியது. 1942ல் எழுதப்பட்டது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஓலைச் சுவடி கூட அங்கு இருக்கிறது. அங்குள்ள ‘சாமுத்திரிகா இலட்சணம்’ என்ற ஏட்டை நுண்பெருக்கி கொண்டு படிக்க வேண்டும் அவ்வளவு பொடி எழுத்துகள்.



காலத்துக்கும் பொருந்தும்

# கண்ணதாசன் சிந்தனைகள்

நாம் வாழும் காலத்தில் கம்பராய், இளங்கோவாய் வாழ்ந்தவர் கவிஞர் கண்ணதாசன். கவிஞர் என்பவர் தனது கவிதைகளில் புரியாத வார்த்தைகளைப் போட்டு சொல்பவர் என்ற எண்ணம்தான் நம் உள்ளத்தில் எழும். ஆனால் பாமரனும் புரிந்து கொள்ளும் வார்த்தைகளைக் கொண்டு புரியாத விஷயங்களை புரிய வைப்பவர். அவரின் 'நெஞ்சுக்கு நிம்மதி' என்ற நூலில் படித்ததை இங்கே பகிர்கிறேன்.

தகராறு இல்லாத குடும்பம் இல்லை.. வீட்டுக்கு வீடு வாசப் படி.. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலை.. யானைக்கு தன் உடம்பைத் தூக்க முடியவில்லையே என்ற கவலை இருந்தால் அணிலுக்கு தன் உடம்பு இவ்வளவு சிறிதாக இருக்கிறதே என்ற கவலை.. ஏழைக்கு தொப்பையை நிறைப்பது கவலையென்றால் பணக்காரருக்கு தொப்பையைக் குறைப்பது கவலை...



காதலித்து கல்யாணம் செய்தவரும் கட்டிலைப் பிரித்து போட்டதுண்டு பெற்றோர் நிச்சயித்த திருமணத்திலும் பேரன்பு பெருக்கெடுப்ப துண்டு அன்பிருந்தும் பணமிருந்தும் சந்ததி இல்லாத குடும்பங்களும் உண்டு. சந்ததி இருக்கும் குடும்பங்கள் சாப்பாட்டுக்கே கஷ்டபடுவதுண்டு. அமெரிக்காவில் பகல் என்றால் இந்தியாவில் இருட்டு பிரச்சனை இல்லாத வாழ்க்கை எவருக்குமே இல்லை ஆக அடுத்தவர் நன்றாக வாழ்வது போலவும் நாம் மட்டும் தான் கஷ்டப் படுவது போலவும் பிரமை வேண்டாம் கணவர் வீட்டுக்கு வரும் போதே பிரச்சனையோடு வரக் கூடாது. மனைவியும் அவரை கேள்விகுறிகளோடே வரவேற்கக் கூடாது..

கணவர் எதையும் அடித்து சொல்ல கூடாது மனைவி எதையும் இடித்து பேச கூடாது "நீங்க வாங்கின காய்கறி மகா மட்டம் "என்று மனைவி சொன்னால்.."எந்த நாய் சொன்னது?" என்று கணவன் பதில் சொன்னால் தான் பிரச்சனை..

தன் தவறை ஒத்துக் கொண்டு.. "சரி இனி பார்த்து வாங்குகிறேன்" என்று சொல்லி விட்டால் முடிந்தது "நீ செய்த சாப்பாடு சகிக்கலை" என்று கணவன் சொன்னால்.. "எனக்கு தெரிந்த லட்சணம் இவ்ளோதான். நீங்க உங்க அம்மா வீட்டுக்கு போய் சாப்பிடுங்க" என்று மனைவி பதில் சொன்னால் தான் பூகம்பம் ஆரம்பம்.."இன்னிக்கு உடம்பு முடில.. நாளைக்கு நன்றாக சமைக்கிறேன்" என்று சொன்னால் அன்பு வெள்ளம் தான்... மனைவி புது புடவை உடுத்தினால் ...."இந்த புடவை நன்றாக இருக்கு.. அழகா இருக்கே" என்று சொல்லணும் கணவன் வெளியிலிருந்து வரும் போது" ஏன் இப்படி வியர்த்திருக்கிறது..எளச்சு போய்ட்டீங்களே" என்று அக்கறையோடு மனைவியும் விசாரிக்க வேண்டும்.. மனைவியைக் கணவன் "அம்மா" என்று அழைக்கணும் கணவனை மனைவி "அப்பா" என்று அழைக்கணும், தன் தாயை மனைவி நன்றாக நடத்தினால் கணவனுக்கு நிம்மதி தன் தாய் வீட்டை கணவன் பெருமையாக கூறினால் மனைவிக்கு நிம்மதி.

கணக்கு பண்ணும் நேரத்தில் கணக்கு வழக்குகள் பேசக் கூடாது.. பகலில் நடக்கும் எந்த வாக்குவாதமும் அன்று இரவிற்குள் சரிசெய்யப்பட்டு சேர்ந்து விட வேண்டும்..

முக்கியமாக கணவனும் மனைவியும் சிந்திக்க வேண்டிய விஷயம்..வார்த்தைகளில் ஜாக்கிரதை எள்ளைக் கொட்டினால் பொறுக்கி விடலாம். சொல்லைக் கொட்டி விட்டால் பொறுக்க முடியாது முள்ளால குத்தின காயம் ஆறிடும். சொல்லால குத்தினா ஆறவே ஆறாது.. ஒருவரை யொருவர் அனுசரித்து போனால் உலகையே தனக்குள் அடக்கி கொள்ள முடியும்.

இரண்டு கை தட்டினால் தான் ஓசை என்பார்கள்.. ஒருவர் கோபம் கொள்ளும் போது இன்னொருவர் விட்டு கொடுக்க வேண்டும்..

"பெண்டாட்டி தானே சொல்லிவிட்டு போகிறாள் ".என்றும்.." கணவன் தானே, பேசட்டும்" என்றும் விட்டுக் கொடுத்து விட்டால் உள்ளம் துடிக்காது.. உடல் வலிக்காது.. ஊர் சிரிக்காது.. கவிஞர் கண்ணதாசன் கூறிய வரிகள் காலத்திற்கும் பொருந்துகிறது இல்லையா? வீட்டிலேயே இப்படியென்றால் நாட்டில் எவ்வாறு ஒற்றுமை மேம்படும்...?

ராம் மோகன்

# நீங்களே தயாரிக்கலாம் வாங்க!

கைவினைப் பொருட்கள் மூலம் பலர் தங்களது கற்பனைத் திறனை, கலை நயத்தை, எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர். அறுசுவை நேயர்களில் இத்திறன் கொண்டவர்களின் படைப்புகள் இங்கே வெளியிடப்படுகின்றன. அலங்காரப் பொருட்கள், பெயிண்டிங், தையல், பொம்மைகள் செய்தல் என அனைத்துவித கைவினைகளும், தெளிவானப் படங்களுடன் விவரிக்கப்படுகின்றது. இந்தப் பகுதி, கைவினைப் பொருட்கள் செய்ய கற்றுக்கொள்ள விரும்புவோர்க்கு ஒரு வழிகாட்டியாகவும், உங்கள் திறமைகளை காட்டும் பக்கமாவும் மாறுவது உங்கள் கையில்... உங்கள் திறமைகளை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.

## பிரிட்ஜ் கைப்பிடி

தேவையானவை ; விரும்பிய நிறத்தில் துணி நான்கு துண்டுகள் (12” X 6” அளவில் )

ஸ்பாஞ்ச் துண்டுகள் இரண்டு ( துணியை விட சற்று சிறியதாக) வெல்க்ரோ 12 இன்ச் இரண்டு

உங்கள் வீட்டிலிருக்கும் ஃப்ரிட்ஜின் கைப்பிடி அளவிற்கு ஏற்றாற் போல் துணிகளையும், அதற்கு ஏற்றவாறு வெல்க்ரோ மற்றும் ஸ்பாஞ்ச்சினை எடுத்துக் கொள்ளவும்.

துணியின் உள்பக்கம் வெளியில் தெரியும்படி வைத்து இரண்டிரண்டு துணிகளாக இணைத்து வைத்து சுற்றி மூன்று பக்கங்களில் தைக்கவும்.

பின்னர் தைக்காமல் வைத்திருக்கும் பக்கத்தின் வழியாக திருப்பி விடவும்.

அதன் வழியே ஸ்பாஞ்ச்சை உள்ளே நுழைக்கவும்.

திறந்திருக்கும் பக்கத்தை குண்டூசியால் இணைத்து வைத்துக் கொண்டு பின்னர் மெஷினில் தைக்கவும்.

படத்தில் காட்டியபடி குறுக்கும் நெடுக்குமாக தையல் போட்டு எளிய டிசைன் செய்யவும்.

வெல்க்ரோவை ஒரு பக்கத்தில் மேல்பகுதியிலும், எதிர் பக்கத்தில் கீழ்பகுதியிலும் வைத்து தைக்கவும். இதே போல் மற்றொரு துண்டிலும் செய்யவும். ஃப்ரிட்ஜ் கைப்பிடி அழுக்காகாமல் பாதுகாக்க அழகிய கைப்பிடி தயார்.





## கைப்பை

தேவையானவை: விருப்பமான நிறத் துணி 17 செ.மீ அகலம் 48 செ.மீ நீளம், ஸ்பாஞ்ச் லைனிங் துணி மேலே குறிப்பிட்டுள்ள அதே அளவு, கோல்டன் லேஸ் ஒரு முழம், நாடா லேஸ் தேவையான அளவு

செய்முறை : மேலே குறிப்பிட்டுள்ள அளவில் விருப்பமான நிறத் துணி மற்றும் அதே அளவில் லைனிங் துணியை வெட்டி எடுத்துக் கொள்ளவும். ஸ்பாஞ்ச் லைனிங் துணியின் ஸ்பாஞ்ச் மேலே தெரியும்படி வைத்து ஆரஞ்சு நிறத் துணி உள்ளே இருக்கும்படியும் வைத்து மேல் பக்கம் தவிர்த்து மற்ற மூன்று பக்கங்களையும் இணைத்து தைத்து விடவும். மேலே தைக்காமல் வைத்திருக்கும் பக்கத்தின் வழியாக நல்ல பக்கமாக திருப்பிக் கொண்டு மேலே இருக்கும் துணியை உள்பக்கமாக மடக்கி வைத்து தைக்கவும்.பிறகு மேல்பக்கத்தின் ஓரத்தில் மஞ்சள் துணியின் மேல் கோல்டன் லேஸை வைத்து தைக்கவும்.

மேல் பக்கத்தில் இருக்கும் கோல்டன் லேஸிலிருந்து 33 செ.மீ இடைவெளி விட்டு மேலும் ஒரு கோல்டன் லேஸை வைத்து தைக்கவும். இப்போது மேலே லேஸ் வைத்திருக்கும் இடத்திலிருந்து 10 செ.மீ இடைவெளி விட்டு மீதம் கீழே இருக்கும் துணியை இரண்டாக மேல் நோக்கி மடிக்கவும். நடுவில் வைத்து தைத்த கோல்டன் லேஸ் கீழே பார்டர் போல வரும். அதில் வாய்ப் பகுதிக்காக மேற்பக்கத்தை விடுத்து மற்ற இரண்டு பக்கத்தையும் சுற்றிலும் தைக்கவும். அதன் பிறகு மடக்கிய ஓரத்தின் மேல் புறத்தில் நாடா லேஸ் வைத்து ஊசி நூலால் கைத்தையல் போடவும். தையல் தெரியாமல் உட்பக்கமாக தைக்கவும்.

ரிப்பன் ரோஸை வைத்து தைத்த பகுதியின் மேல்புறத்திலிருந்து சற்று கீழே இறக்கி வைத்து கைத்தையல் போடவும். பின்னர் கோல்டன் லேஸை இரண்டாக மடித்து ரோஸின் உள்ளே நுழையும் அளவிற்கு எடுத்துக் கொண்டு அதன் இரண்டு முனைகளையும் படத்தில் உள்ளபடி பையின் மேல் பக்கத்தில் (லேஸ் இருக்கும் இடத்தில்) வைத்து தைக்கவும். தையல் தெரியாமல் தைக்கவும். அழகிய கைப்பை தயார்.

**சரோஜா சேலம்**







# விடுதலைப் போராட்டத்தில் காந்திக்கு எதிராக லால்-பால்-பால்



லாலா லஜபதி ராய்



பால கங்காதர திலகர்



பிபின் சந்திர பால்

“சுதந்திரப் போராட்டத்திற்கு காந்தி தேர்ந்தெடுத்த ஆயுதம் அஹிம்சை ஆனால் அஹிம்சைப்போர் சரிப்பட்டு வராது என்று எழுந்து களம் இளங்கியவர்கள்தான் இந்திய விடுதலைப் போரின் “மும்மூர்த்திகள்” என்று அழைக்கப்பட்ட லாலா லஜபதிராய் (1865-1928), பால கங்காதர திலகர் (1856-1920) மற்றும் பிபின் சந்திர பால் (1858-1932). இவர்களை ‘லால்-பால்-பால்’ என சுருக்கமாக அழைத்தனர். இந்திய சுதேச இயக்கத்தை வலுப்படுத்தும் மாபெரும் சக்திகளாக இந்த மூவரும் உருவாகினர்.

இவர்கள் இந்திய விடுதலை இயக்கத்தின் தீவிரவாதிகள் பிரிவைச் சேர்ந்தவர்கள். பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியாவை விடுவிக்க ஆயுதங்களைக் கொண்டுதான் “சண்டையிட்டுப் பெறவேண்டும்” என்ற அசைக்க முடியாத கொள்கையைக் கொண்டவர்கள். அதனால் இவர்கள் மிதவாதிகள் பிரிவைச் சேர்ந்த காந்திஜி, கோபால கிருஷ்ண கோகலே ஆகியோரது ஆயுதம் தாங்காத அகிம்சைப் போக்கை எதிர்த்தனர்.

இந்தியாவின் பொருளாதாரம் அன்னியர்களின் கையில் சிக்கி நலிந்து கொண்டிருப்பதைத் தடுக்க வேண்டுமானால், சுதந்திரப் போரில் பொருளாதார அடிப்படையிலான போராட்டம்தான் வேண்டும் என்று இவர்கள் கருதினர்.

அதற்கான போராட்டமே ‘சுதேச இயக்கப் போராட்டம்’ எனக் குறிப்பிடப்படுகிறது. இதன்படி அன்னியப் பொருட்களை வாங்கக் கூடாது; உள்நாட்டில் உற்பத்தி செய்யும் பொருள்களை மட்டும்தான் வாங்கவேண்டும் என்பதாகும். பின்னாளில் ‘சுயராஜ்ஜியத்தின் ஆன்மா என்பதே சுதேசியம்தான்’ என்று காந்திஜியே போற்றும் அளவிற்கும், அன்னியப் பொருள் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்தும் அளவிற்கும் இவர்களது சுதேச இயக்கம் வளர்ந்தது. ‘பஞ்சாப் சிங்கம்’ லாலா லஜபதிராய் சட்டம் பயின்று வக்கீலானார். 1888 ஆம் ஆண்டு முதல் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தேச நலனுக்காகப் பாடுபட்டார். 1907ஆம் ஆண்டு தேசபக்தர் ராஷ் பிகாரி போஸ் தலைமையில் நடந்த சூரத் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு ‘இந்தியாவில் மக்கள் அரசு ஏற்பட வேண்டும்’, ‘கல்வியை தேசியமயமாக்கப்பட வேண்டும்’ என்று மக்களுக்கு தன் கருத்துகளை எடுத்துக் கூறினார்.

1907 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு குடிநீருக்கான வரியை உயர்த்தியது. அதைக் கடுமையாக எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். அதற்காக பிரிட்டிஷ் அரசு இவரைக் கைது செய்து பர்மாவின் மாண்டலே சிறைக்கு அனுப்பியது.

அங்கே இவர் ‘எனது நாடு கடத்தப்பட்ட கதை’ என்ற ஒரு சிறப்பான நூலை எழுதினார்.

1920-ஆம் ஆண்டு இந்தியாவிற்கு திரும்பி தீவிரமாக விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டத்தை எதிர்த்தாலும் இறுதியில் அதற்கு ஆதரவும் அளித்தார். பால கங்காதர திலகர் நிறுவிய சுயராஜ்ஜிய நிதிக்கு அந்தக் காலத்திலேயே ஒன்பது லட்சம் ரூபாய் வசூல் செய்து கொடுத்தார். 1921-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு விதித்திருந்த தடையை மீறி பஞ்சாப் மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்டினார். அதற்கு அவரே தலைமை தாங்கி, பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதற்காக பிரிட்டிஷாரால் கைது செய்யப்பட்டார்.

1926ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேருவின் தந்தை மோதிலால் நேரு தோற்றுவித்த, ‘சுயராஜ்ஜிய கட்சி’ யில் சேர்ந்தார். சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பால கங்காதர திலகர் ‘இந்திய அரசியல் கிளர்ச்சியின் தந்தை’ என அழைக்கப்படுகிறார். சுதேசியின் முழு அர்த்தம் சுயராஜ்ஜியத்தில்தான் கிடைக்கும் என்பதை பிரிட்டிஷாருக்கும் மக்களுக்கும் மிக அழுத்தமாக உணர்த்தியவர். தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் தேசபக்தர் வ.உ.சிதம்பரம் பிள்ளை சுதேசி கப்பல் துவக்கப் பெருமளவில் உதவினார். வங்காளத்தில் பிறந்த மற்றுமொரு வீரச் சிங்கம்தான் பிபின் சந்திர பால். வக்கீலுக்குப் படித்து ஒரிஸ்ஸாவின் கட்டாக் நகர சட்டக் கல்வி நிலையத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் தேசியப் பள்ளியை தானே நிறுவி அதன் ஆசிரியரானார்.

1886ஆம் ஆண்டு இவர் இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்தார். 1887ஆம் ஆண்டு தேசபக்தர் பத்துர்தின் தயாப்ஜி தலைமையில்



Swadeshi Movement, 1905-1911



**ஆசிரியர்** : பிள்ளைகளே.. இன்னைக்கு கணக்குப் பாடம்.. 1,2,3 கத்துத் தரப்போறேன்..

**சிறுவன்** : எனக்கு தெரியும் டீச்சர்.. எங்கப்பா கத்துக் குடுத்திருக்காங்க..!

**ஆசிரியர்** : வெரி குட்.. 3 க்கு அப்புறம் என்ன சொல்லு..?

**சிறுவன்** : 4 டீச்சர்.

**ஆசிரியர் : 8 க்கு முன் என்ன வரும்..?**

**சிறுவன்** : 7 டீச்சர்.. எங்கப்பா கத்துக் கொடுத்திருக்காங்க..!

**ஆசிரியர்** : எல்லா அப்பாவும் இப்படி இருந்தா எங்களுக்கு வேலையே இல்லே..சரி 10க்கு மேலே சொல்லு பார்ப்போம்..

**சிறுவன் : ஜாக், குயின், கிங், ஆஸ்..**

சென்னையில் (அப்போது மதராஸ்) நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பிரிட்டிஷாரை விமர்சித்து இவர் ஆற்றிய உரை மக்களிடையே பலத்த வரவேற்பைப் பெற்றது.

1900களில் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்று இந்திய அரசியல் நிலை பற்றி அங்குள்ள மக்களுக்கு விளக்கினார்.

பின்னர் இந்தியா திரும்பி பால கங்காதர திலகர், லாலா லஜபதி ராய் ஆகியோருடன் போராட்டத்தில் ஈடுபட்டார். 1907ஆம் ஆண்டு அலிப்பூர் வெடிகுண்டு வழக்கில் நீதிமன்றத்தில் இவர் சாட்சி சொல்ல மறுத்தார் என்பதற்காக பிரிட்டிஷ் அரசு இவருக்கு ஆறு மாத சிறைதண்டனை விதித்தது. விடுதலைக்குப் பின் தனது சுதேச சேவையைத் தொடர்ந்தார். 1886 ஆம் ஆண்டு ‘பரிதர்சக்’ என்ற பெங்காலி மொழி வாரப் பத்திரிக்கையையும், 1902ஆம் ஆண்டு ‘புதிய இந்தியா’ என்ற ஆங்கிய மொழி வார இதழையும், 1906ஆம் ஆண்டு ‘வந்தே மாதரம்’ என்ற பெங்காலி மொழி தினசரியையும் இவர் நடத்தினார். இந்த பத்திரிக்கைகளில் இந்திய விடுதலை பற்றிய வீர உணர்ச்சிகளை மக்களுக்கு ஊட்டினார். நவீன இந்தியாவை உருவாக்குவதில் பெரும் அங்கம் வகித்த ராஜாராம்மோகன் ராய், கேசப் சந்திர சென், அரபிந்தோ கோஷ், ரபீந்திரநாத் தாவர், அ ஷுதோஷ் முகர்ஜி, அன்னிபெசண்ட் ஆகியோரின் வாழ்க்கையைத் தொடர் கட்டுரையாகப் பத்திரிகைகளில் எழுதி அவர்களின் தேச சேவைக்கு பெரிய மரியாதை கொடுத்தார்.

இந்திய விடுதலைப் போரில் புரட்சிக் கொள்கையைக் கொண்டிருந்த பிபின் சந்திர பால் மே 20, 1932 அன்று மரணமடைந்தார்.

இந்தியப் பொருளாதாரத்தை சுரண்டிய பிரிட்டிஷார், ஒட்டு மொததமாக நாட்டைவிட்டு வெளியேற இதுபோன்ற சுதேசிக் கொள்கைகளே காரணமாக அமைந்தன.



# மாண்புமிகு அமைச்சர் பாண்டியராஜனின் உழைப்பும் திறமையும்

இன்றைக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சராக இருப்பவர் மா.பா. பாண்டியராஜன். அரசியலில் சாதாரணமாக எளிய தொண்டனும் பதவிக்கு வர முடியும் என்பது அ.தி.மு.க.வில் மட்டுமே சாத்தியம். அம்மா நினைத்தால் யாரை வேண்டுமானாலும் மந்திரியாக்குவார். -தவறு செய்பவர்கள் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் அவரை தூக்கி எறிய தயங்க மாட்டார் என்று அ.தி.மு.க.வினர் நெஞ்சை நிமிர்த்தி பெருமையோடு சொல்லுகிறார்கள். மா. பா. பாண்டியராஜன் அவர்களின் உழைப்புக்கும் திறமைக்கும் அங்கீகாரம் அளிக்கும் வகையில் முதலமைச்சர் ஜெயலலிதா அவருக்கு அமைச்சர் பதவி வழங்கியுள்ளார்.

பட்டாசு தொழிற்சாலைக்கு பெயர் பெற்ற குட்டி சிங்கப்பூர் என்றழைக்கப்படும் சிவகாசியில் பட்டாசு தொழிற்சாலையில் பணியாற்றிய சாதாரண தொழிலாளியின் மகனாக 1959 ஏப்ரல் 26-ல் பிறந்தார். மா.பா.பாண்டியராஜன். பிறந்த மூன்றாம் மாதத்தில் தந்தையை இழந்தார். ஆரம்பத்தில் மிகுந்த சிரமப்பட்டு கல்வி கற்று தொடர்ந்து கோவையில் பொறியியல் பட்டதாரியாக பயின்றபின்பு, ஜாம்செட்பூரில் எம்.பி.ஏ., (மனிதவள மேம்பாடு) முடித்து கொல்கத்தாவில் பணிபுரிந்தார்.

சமூக சேவகராக தன்னை எப்போதும் முன்னிறுத்திக் கொண்டவர் மா.பா. அதற்கென உருவாக்கப்பட்ட அமைப்புகளின் மூலமாக நான்காயிரம் ஏழைக் குழந்தைகளின் படிப்பிற்காக கல்வி உதவித்தொகை வழங்கிட ஏற்பாடு செய்துள்ளார். சொர்ணாம்பாள் கல்வி டிரஸ்ட் மூலம் ஏராளமான பெண்களுக்கு உதவிகள் கிடைக்கவும், தொழிலில் பெண்கள் முன்னேறவும்





வழிவகை செய்துள்ளார். தன்னுடைய பேச்சாலும் கட்டுரையாலும் 1,00,000 மாணவர்கள் வாழ்வில் முன்னேறவும், தொழில் தொடங்கவும் பாதை அமைத்துக் கொடுத்தார். தொழிலதிபராக அவர் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டது சென்னையில். '1992 மா.பா.இந்தியா' என்ற மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தை ஏற்படுத்தி இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத் தந்துள்ளார்.

அரசியலில் நுழைந்த மா.பா. முதலில் பா.ஜ.க.விலும், பின்னர் விஜயகாந்த் கட்சி தொடங்கியபோது அந்தக் கட்சியில் சேர்ந்து தே.மு.தி.க.வின் விருதுநகர் எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2011-ல் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சரான பின்பு விஜயகாந்த் உடனான கூட்டணி

**பேசக்கூடிய இடத்தில் சரியாக புள்ளி விவரத்துடன் பேசக்கூடிய ஆற்றல் பெற்ற மா.பா. பாண்டியராஜனை தொலைக்காட்சி விவாதங்களில் அவர் பங்குபெறும் பாங்கினைக் கண்டு வியந்தவர்கள் உண்டு.**

முறிவு பெற்றது. ஆயினும் தே.மு.தி.க.வைச் சேர்ந்த எட்டு எம்.எல்.ஏ-க்கள் விஜயகாந்த் கடுமையாக ஜெயலலிதாவை எதிர்த்தபோது முதலமைச்சர் என்ற முறையில் அவர்களை தங்கள் தொகுதி சம்மந்தமாக சந்திக்கிறோம் என்று சந்தித்து தங்களை அ.தி.மு.க.வின் ஆதரவாளர்களாக வெளிப்படுத்திக் கொண்டனர். பின்னர் 2016 தேர்தலுக்கு சற்று முன்பாக எட்டு எம்.எல்.ஏ.க்களும் முதலமைச்சர் முன்னிலையில் அ.தி.மு.க.வில் சேர்ந்தனர். அப்படி சேர்ந்தவர்களில் எம்.எல்.ஏ.சீட்டு கிடைக்கப்பெற்ற ஒரே எம்.எல்.ஏ. மா.பா. என்பது குறிப்பிடத்தக்கது.

பேசக்கூடிய இடத்தில் சரியாக புள்ளி விவரத்துடன் பேசக்கூடிய ஆற்றல் பெற்ற மா.பா. பாண்டியராஜனை தொலைக்காட்சி விவாதங்களில் அவர் பங்குபெறும் பாங்கினைக் கண்டு வியந்தவர்கள் உண்டு.

ஆவடி எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்ற பாண்டியராஜன் சட்டசபை விவாதங்களில் அடிக்கடி பங்கேற்றார். ஒருமுறை மதுரை மேற்குத் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. பழனிவேல் தியாகராஜன் ஆங்கிலத்தில் பேசியபோது அவருக்கு பதில் சொல்ல பாண்டியராஜன் எழுந்து ஆங்கிலத்தில் பேசினார் . அப்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் பதில் சொல்ல வேண்டியதற்கு எம்.எல்.ஏ. பதில் சொல்வது சரியா? என்று கேட்டார். இதை மனதில் வைத்துத்தானோ என்னவோ முதலமைச்சர் ஜெயலலிதா மா.பா. பாண்டியராஜனை அமைச்சராக்கியிருக்கலாம் என்று அரசியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

உழைப்புக்கும் திறமைக்கும் என்றைக்குமே பின்னடைவு இருக்காது என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் மா.பா. பாண்டியராஜனின் அரசியல் முன்னேற்றமே உதாரணம்.

**மாண்புமிகு அமைச்சரின் பணி சிறக்கவும் அதன்மூலம் மக்கள் செழிக்கவும் மித்ரா குழுமத்தின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.**

எம். எஸ். மூர்த்தி

# அக்டோபர் மாத இராசி பலன்கள்

**மேஷம்:** தன்னம்பிக்கையும், மற்றவர்களுக்கு தைரியம் கொடுப்பதில் சிறந்து விளங்கும் மேஷ ராசி அன்பர்களே! இந்த மாதம் 6க்கு உடையவன் 6ல் மறைந்து இருப்பதால் தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடன் கொடுத்தவர்கள் கேட்டு தொல்லை செய்ய மாட்டார்கள். பஞ்சமாபதி 6ல் மறைந்து இருப்பதால் நாம் முயற்சி செய்யும் காரியம் தடைபடும். பண தட்டுப்பாடு இருக்கும். சுக்கிரன் சூப்பராக இருப்பதால் தேவைக்கு பணம் வரும். எதையும் யோசித்து செய்ய வேண்டும்.

பரிகாரம் ; தினமும் சூரிய வழிபாடு அவசியம். ஞாயிற்றுக் கிழமைகளில் விரதமிருந்து சிவனை வழிபட்டால் நன்மை கிடைக்கும்.

**ரிஷபம்:** புத்திசாலிதனமும் கலைத்துறையில் சாதுரியமும் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே! இம்மாதம் ராசிநாதன் மறைந்து இருந்தாலும் நன்மையே! குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புதிய முயற்சிகள் இப்போதைக்கு வேண்டாம். தொழில் சுமாராக இருக்கும். தாய் வழியில் மருத்துவச் செலவுகள் உண்டு. புதுப்புது சிந்தனைகள் தோன்றும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். பிரச்சனைகள் பல விதத்தில் வந்தாலும் குருவின் அருளால் அனைத்தும் நன்மையாக முடியும்.

பரிகாரம் : சனிக்கிழமைகளில் விஷ்ணு வழிபாடு நன்மை அளிக்கும்.

**மிதுனம்:** எப்போதும் மனதில் சதா கணக்குப்போட்டுக் கொண்டிருக்கும் மிதுன ராசி அன்பர்களே!

இராசிநாதன் சிறப்பாக உள்ளார். உங்கள் திறமை பளிச்சிடும். எண்ணிய எண்ணம் கைகூடும். வாக்கு கொடுப்பதில் பலமான யோசனைக்கு பின்னே கொடுக்க வேண்டும். தொழிலும் வரவும் சிறப்பாக இருக்கும். தொழிலில் உங்கள் சாமர்த்தியம் வெளிப்படும். கொடுக்கல் வாங்கலும் சிறப்பாக இருக்கும். சனி மாறும்வரை உணவு, உறக்கம் இதற்கு முக்கியத்துவம் கொடுங்கள். இல்லையென்றால் நரம்பு சம்மந்தமான கோளாறு ஏற்படும்.

பரிகாரம் ; திருவக்கரை சந்திர மௌலிஸ்வரர் கோவிலுக்கு குடும்பத்தோடு சென்று வாருங்கள்.

**சிம்மம்:** அதிகாரத்திலும், ஆணவத்திலும் மேம்பட்டு காணப்படும் சிம்ம ராசி அன்பர்களே! வாக்கில் சூரியன் இருப்பதால் வாக்கு பலிக்கும். சில நேரங்களில் பலரின் மனது காயமாகும். எனவே பேச்சில் கவனம் தேவை. 5க்குடையவன் 2ல் இருப்பதால் பதவி பட்டம் தேடி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்பட்ட போதிலும் சிறு சிறு சலசலப்பு வந்து மறையும். ஆன்மீகத் தேடலில் உங்கள் மனம் செல்லும்.

பரிகாரம் ; சிவ ஆலய வழிபாடு சிறப்பு சேர்க்கும். அம்மன் கோவிலுக்கு சென்று வருவது நல்லது

**கடகம்:** சிறப்பான சிந்தனை கொண்ட கடக ராசி அன்பர்களே!

இம்மாதம், தைரியாதிபதி வலுவாக இருப்பதால் எந்தப் பிரச்சனைகளையும் துணிந்து கையில் எடுக்க தோன்றும். யோசிக்காமல் ஈடுபட்டுவிட்டால், வீண் விரயத்தை சந்திக்க வேண்டியது வரும். வீடு கட்ட நினைத்தவர்கள் கட்டலாம். வங்கி கடன் உதவி இலகுவாக கிடைக்கும். வண்டி வாகனங்கள் புதுப்பிப்பீர்கள். உங்கள் திறமை பளிச்சிடும். குடும்பத்தில் சிறு சிறு குழப்பம் தோன்றி மறையும்.

பரிகாரம் ; செவ்வாய், வெள்ளி அன்று ராகு கால பூஜை செய்து வாருங்கள்.

**கன்னி:** மற்றவர்களை எடை போடுவதிலும், விமர்சிப்பதிலும் முதன்மையாக விளங்கும் கன்னி ராசி அன்பர்களே! குடும்பாதிபதி சிறப்பாக இருப்பதால் குடும்பத்தில் குதூகலம் கூடும். வருமானம் சிறப்பாக இருக்கும். பேச்சில் இனிமை காணப்படும். திருமண கனவு பலிக்கும். தொழில் சிறப்பாக இருக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. எழுத்து, கலைத்துறையில் உள்ளவர்கள் பாராட்டுப் பெறுவீர்கள். உங்கள் திறமையில் செயல் வேகம் கூடும். சனி மாறும் வரை பெரிய அளவில் முதலீடு செய்வதை தவிர்க்கவும்.

பரிகாரம் ; ஞாயிற்றுக் கிழமைகளில் விரதம் இருந்து சரபேஸ்வரரை வணங்குங்கள்.

**துலாம்:** கலையுள்ளம் கொண்ட துலாம் ராசி அன்பர்களே! இராசிநாதன் ஆட்சி பெற்றிருப்பதால் இம்மாதம் சிறப்பாக இருக்கும். அவரே 8க்கு அதிபதியாக இருப்பதால் திடீர் வருமானம் உண்டு. புதுமுயற்சிகளை எடுக்கலாம். வேலை நல்ல நிலையில் செல்லும். தேவகுரு மறைந்தாலும் பார்வைபலம் சிறப்பாக இருக்கின்றது. வீட்டில் திருமணப் பேச்சு நடைபெறும். புதுப்புது அனுபவம் கிடைக்கும். மருத்துவ செலவு உண்டு. வாகனப் பராமரிப்பு செலவு ஏற்படும் வரவுக்கு பங்கம் இல்லை.

பரிகாரம் : ஸ்ரீரங்கம் சென்று பெருமாளை தரிசித்தால் குடும்பம் மேன்மையுறும்.

**விருச்சகம்:** தைரியத்திலும், கோபத்திலும் சிறந்து விளங்கும் விருச்சக ராசி அன்பர்களே! வாக்கு குடும்பாதிபதி சிறப்பாக விளங்குவதால் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும். பேச்சில் தெளிவு இருக்கும். மேடை பேச்சாளர்கள், பட்டிமன்ற பேச்சாளர்கள் சிறந்த பாராட்டை பெறுவார்கள். தலைமை பொறுப்பு தேடிவரும். தாய் உடல் நலத்தில் அக்கறை வேண்டும். மருத்துவ செலவுகள் உண்டு. புது தொழில் நன்றாக நடக்கும். கோர்ட் கேஸ் கட்டுப்பாட்டில் இருக்கும். வழக்கு கோர்ட்டுக்கு வந்தால் கண்டிப்பாக வெற்றி கிடைக்கும். வீடுகட்டி முடியாமல் இருந்தால் இம்மாதம் முடிந்துவிடும்.

பரிகாரம் : சிறுவாபுரி முருகன் கோயிலுக்குச் சென்று வர நினைத்தது அனைத்தும் நடக்கும்.

கணித்தவர்: சிவமனோகரன் தொடர்புக்கு : 7200097256

### உறங்காப்புளி

திருச்செந்தூர் பாதையில் திருநகரியில் உள்ள புளிய மரத்தை உறங்காப் புளி என்கிறார்கள். இந்த மரம் உறங்குவதெயில்லையாம். இதிலுள்ள பொந்தில்தான் நம்மாழ்வார் 16 வருடங்கள் யோக முத்திரையுடன் எழுந்தருளினார்.

**தனுசு:** எண்ணங்களில் புதுமை, சொற்களில் கடிமை, நடத்தையில் இனிமை கொண்ட தனுசு ராசி அன்பர்களே! 10ல் பகவான், குரு, புதன் இருப்பதால் செய் தொழிலில் மாற்றம், அரசு ஆதரவில் தொழில் ஏற்றம், சிறப்பான வருமானத்தை நோக்கிய பயணம் என இம்மாதம் சிறப்பாகும். 6க்குடையவன் வலுவாக இருப்பதால் எதிரிகளின் கை ஓங்கும். உடல் நலம் மங்கும். மருத்துவ செலவு பொங்கும். வருத்தமும் மகிழ்ச்சியும் கலந்து நடைபெறும். குடும்பத்தில் காரணமே இல்லாமல் சண்டை வரும். தாய்வழி ஆதரவு சிறப்பாக இருக்கும்.
பரிகாரம் : ஸ்ரீரங்கம் சென்று பெருமாளை தரிசித்தால் குடும்பம் மேன்மையுறும்.

**மகரம்:** எண்ணத்தில் உறுதியும், நடத்தையில் நேர்மையும் கொண்ட மகர ராசி அன்பர்களே!
இம்மாதம் வாக்கில் நிதானம் தேவை. கேது 2ல் இருப்பதால் புதுப்புது அனுபவம் கிடைக்கும். 5,10க்குடைய சுக்கிரன் ஆட்சி பெற்று காணப்படுவதால், தொழிலில் இருந்த தடை அகலும். தொழில் மேன்மையுறும். வரவுகள் தாமதமாகும். திடீர் செலவுகள் உண்டு. மருத்துவச் செலவு வழக்கம் போலுண்டு. 2ல் கேது இருப்பதால் வாக்கில் நிதானம் தேவை. குடும்பத்தில் மனவருத்தம் வந்து போகும்.
பரிகாரம் : தினந்தோறும் சூரிய வழிபாடு அவசியம். சனிக்கிழமைகளில் சனீஸ்வர வழிபாடு நன்மை பயக்கும்.

**கும்பம்:** எல்லோர்க்கும் அறிவுரை கூறுவதில் சிறந்து விளங்கும் கும்ப ராசி அன்பர்களே!
ஜென்ம கேது இருப்பதால், உங்களுக்குள் கட்டுப்பாடு சிறந்து மேலோங்கும். தேடிப்போய் மற்றவர்களுக்கு உதவி செய்வீர்கள். பணவரவு சிறப்பாக இருக்கும். 2ம் இடத்தை ஆட்சி பெற்ற புதன் குரு, சூரியன் பார்ப்பதால் பணம் பாக்கெட்டை நிரப்பும். நல்ல வழிகளில் பணத்தை செலவு செய்ய திட்டம் தீட்டுவீர்கள். குடும்பத்தில் திடீர் குழப்பம் தோன்றி மறையும். நீண்டகால காரியம் ஒன்று இம்மாதம் நடந்து உங்களை மகிழ்விக்கும்.
பரிகாரம் : தினந்தோறும் சூரிய வழிபாடு, விநாயகர் வழிபாடு நன்மை பயக்கும்.

**மீனம்:** இம்மாதம் உங்கள் எண்ணம்போல் எல்லாம் நடக்கும். பகலவன் பார்வையும் குருவின் பார்வையும் சேர்ந்து இருப்பதால் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். தொழில் சிறப்பாக இருக்கும். பணவரவு நன்றாக இருக்கும். உங்கள் திறமை வரவேற்கப்படும். 4,7க்குடைய புதன் ஆட்சி பெற்றிருப்பதால், உங்கள் மனைவி மூலம் நன்மை ஏற்படும். மனைவி பெயரில் வீடு வாங்கும் யோகம் சிலருக்கு உண்டு. 6ல் ராகு இருப்பதால் எதிரியை வெல்லும் சக்தி உண்டாகும். மருத்துவச் செலவு மிக குறைவாகவும் மனம் நிறைவாகவும் இருக்கும்.
பரிகாரம் : தினந்தோறும் சூரிய நமஸ்காரம் நன்மையளிக்கும். செவ்வாய்கிழமை முருக வழிபாடு நிம்மதி தரும்.

# அம்மாவுக்கு ஓர் கடிதம்

**பிறந்தவீட்டில் செல்லப் பெண்ணாக ஓடி ஆடி சுற்றித்திரிந்த பெண்கள் புகுந்த வீட்டில் அத்தகைய செல்லத்தை அத்தையிடம் பெறமுடிவதில்லை. அப்படி ஏங்கும் ஒரு பெண்ணின் கடிதம்...**

அன்புள்ள அம்மா,

எல்லா பெண்களைப் போலவே கல்யாண கனவில் களித்து மனதைக் கொள்ளையடித்தவரை உங்கள் சம்மதத்துடன் குதூகலமாக ஆடம்பரமாக திருமணம் புரிந்து கொண்டேன் . பின்னர் தான் தெரிந்தது வாழ்க்கை சினிமாவில் போடும் சுபத்திற்கு பின்பு தான் தொடங்குகிறதென்று. வாழ்க்கையில் விரும்புவது விரும்பப் படுவதென்பதையும் தாண்டி நிறைய இருக்கிறது என்று தெரிய வருகிறது

எத்தனை பொறுப்புகள், எத்தனை சுமைகள், எத்தனை எதிர் பார்ப்புகள், எத்தனை தியாகங்கள், எத்தனை ஏமாற்றங்கள் நினைத்த நேரத்தில், நிம்மதியாக முழுத் தூக்கம் கலைந்த நேரத்தில் எழுந்திருக்க முடியவில்லை.. குடும்பத்தில் மற்றவர் விழிக்கும் முன் நான் விழித்து என் வேலைகளை ஆரம்பிக்க வேண்டி இருக்கு.. உன்னோடு இருந்த நாட்களில் எனக்கென்ற விருப்பமான உடைகளில் சிட்டாக பறந்து கொண்டிருந்தேன்.. இங்கே அவர்கள் விரும்பிய உடையில் வலம் வருவதையே விரும்புகின்றனர்.. இதோ என் தோழியை/தோழனைப் பார்த்து விட்டு வருகிறேன் என்று உன்னிடம் சொல்லிவிட்டு சென்றது போல் சொல்லிச் செல்ல இயலவில்லை. என் தேவைகளை விட அடுத்தவர் தேவைகளை முன் வைத்தே நான் நடந்து கொள்ள வேண்டி இருக்கிறது.

நினைத்த நேரத்தில் தூங்க கூட முடிவதில்லை. எனக்கு விருப்பமான டிவி நிகழ்ச்சியைக் கூட பார்க்க முடிவதில்லை.. சில நேரங்களில் எதற்கு இந்த திருமணம் என்று அலுப்பாக இருக்கிறது.. இந்த திருமணம் என் சுதந்திரத்தை அல்லவா பறித்து விட்டது..என் சுயத்தை அல்லவா சூறையாடி விட்டது உன்னிடம் இருந்த போதே மிக மகிழ்வாக இருந்தேனே! உன்னிடம் திரும்ப வந்து விடலாமா என்று கூட தோன்றுகிறது. உன் மடியில் படுத்து கொள்ளனும் போல இருக்கிறது. வேண்டாம் வேண்டாம் என்று நான் சொல்ல சொல்ல ஒரே ஒரு இட்லி போட்டுக்கோ.. உனக்கு பிடிக்குமேன்னு பால் கோவா செஞ்சேன்னு நீ பின்னாலயே வந்து வந்து ஊட்டி விட்டதை இன்றும் நினைத்தால் இனிக்கிறது. எந்த கவலையும் இல்லாமல் உன் அரவணைப்பில் உன் கொஞ்சலில் உன் பாதுகாப்பிலேயே இருந்திருக்க கூடாதா என்று தோன்றுகிறது.. ஆனால் அடுத்த கனமே நீயும் என் வயதில் என்னை மாதிரி தானே உணர்ந்திருப்பாய் நீ உன் திருமணத்தில் செய்த தியாகங்கள் தானே எனக்கு இந்த அழகிய நினைவுகளைக் கொடுத்திருக்கிறது.. நீ அன்று நான் இன்று நினைப்பது போல் நினைத்திருந்தால் நான் இன்று இருப்பேனா.. நீ செய்த தியாகங்களையும் உழைப்பையும் பாசத்தையும் எதிர்பாரா அன்பையும் நான் திருப்பி தர வேண்டாமா..என்று நினைத்து கொள்கிறேன் .. அதுவும் உன்னிடம் இருந்து கற்றது தான்.. அப்படி நினைக்கும் போது வாழ்க்கையே எளிதாக தெரிகிறது.. தெளிவாக புரிகிறது காலம் செல்ல செல்ல நீ உன் குடும்பத்தை நேசித்தது போல் நானும் என் குடும்பத்தை நேசிக்க ஆரம்பித்து விடுவேன்.. நீ செய்த தியாகங்களை நானும் செய்ய தயாராகி விடுவேன்..

உனக்கு நாங்கள் கொடுத்த மன உறுதியை திடத்தை என் குடும்பமும் எனக்கு தரும் ஆமாம் மா நீ எனக்கு கொடுத்ததை நானும் என் குடும்பத்திற்கு கொடுக்கத் தயாராகி விட்டேன்..

ஆனால் அம்மா நீ உன் வீட்டிற்கு வந்துள்ள இன்னொரு வீட்டுமகளானஅண்ணியை நடத்தும்போது என்னைநினைத்துக் கொள். அப்போதுதான் நான்படும் துன்பம் உனக்கு தெரியும். மருமகளை மகளாக நீ நடத்துவாய் என்று நான் நம்புகிறேன்.



# கை வண்ணம்













நண்பர்களே பென்சில்சீவும்போது வெளிவரும் தோலை தூக்கி எறியாதீர்கள். அதைக்கொண்டு அழகிய கைவண்ணத்தை காட்டலாம்.












**S. Surya**

STD VII-B, SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL CHENNAI


# அரசு சார்பில் வளையல்காப்பு




சேலம் மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டதிற்கிணங்க சேலத்தில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி தாய்மார்களுக்கு சீர்வரிசை வழங்கினார். விழாவில் எம்.பி.வீ.பன்னீர் செல்வம், எம்.எல்.ஏக்கள் ஜி.வெங்கடாசலம், ஏபி சக்திவேல், மனோன்மனி, மேயர் சவுண்டப்பன் / துணைமேயர் நடேசன், அதிகாரிகள் திருமதி. கே.கவிதா, தேவிகுமாரி ஆகியோர் பங்கேற்றனர்.

Salem Praveenkumar

## கடக ராசிக்காரர்களின் பரிகார ஆலயம்

# புற்று நோயை தீர்த்து வைக்கும் கற்கடேஸ்வரர்

ஒரு சமயம் தேவேந்திரனுடைய மகன் சயந்தன் அத்திரி முனிவரைக் கேலி செய்ததால் அவருடைய சாபத்திற்கு ஆளானான். அம்முனிவர் அவனை நண்டாகும்படி சபித்தார். தன் தவற்றை உணர்ந்து அம்முனிவரை வணங்கிக் கழுவாய் வேண்டினான்.

அவ்வேண்டுகோளுக்கிணங்கி அம்முனிவரும், “காரைக்கால் அம்மையார் என்றும் பாடிக்கொண்டிருக்கும் அரிய தவமாகிய திருவாலங்காட்டிற்கு அருகில் இறைவர் உமையை மணம் கொண்ட தலமாகிய “மணவூர்” உள்ளது. அவ்வூரில் எழுந்தருளியுள்ள இறைவரை திருநந்தீ ஸ்வரப் பெருமானாரை வணங்கி அந்த எல்லையில் தனியே நீ ஒரு சிவலிங்கம் வழிபட்டு வந்தால் சாபம் நீங்கும்” என்று கூறினார்.

நண்டு (சயந்ரை) வணங்கி, மணவூர் எல்லையில் தங்கியிருந்தது. அச்சமயத்தில் பூமியைப் பிளந்து கொண்டு அற்புதமான சிவலிங்கம் ஒன்று வெளிப்பட்டது.

அச்சிவலிங்கத்தை பூஜிக்க நண்டும் நீர்நிலை ஒன்றை ஏற்படுத்தி அந்நீரால் பல காலம் தான்தோன்றியப் பெருமானை (சுயம்பு) அபிஷேகம் செய்து வழிபட்டு வந்தது. பின் நண்டு வடிவம் நீங்கியது. சயந்தன் பழைய வடிவம் பெற்றான்.

நண்டு கற்கடகம் பூசித்ததால் இறைவர் “கற்கடேசுவரர்” எனப்படுகிறார். தான்தோன்றியப் பெருமான் நண்டு அபிஷேகத்திற்கு உண்டாக்கிய நீர்நிலை “கற்கடநீர்த்தகுளம்” எனப்படுகிறது. ஆலகமும் கற்கடேசுவரர் ஆலயம் எனப்படுகிறது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து அரக்கோணம் செல்லும் வழியில் மணவூர் ரயில் நிலையத்தில் இறங்கி 1 கி.மீ. நடைதூரத்தில் உள்ளது இந்த ஆலயம்.

தரிசனத்திற்கும், திருப்பணியில் பங்கு பெறவும் தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் : 8012247358 / 9444060915 / 9841060503 / 9941927877

மணவூர் வடாரண்யேஸ்வரன்



# விளம்பரம் பார்த்து மனை வாங்க போறீங்களா?




தொடர் 5



சமீபத்தில் உயர்நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வெளியாகியிருக்கிறது. அந்த தீர்ப்பின்படி, அங்கீகாரம் பெறாத மனைகளை பத்திரப் பதிவிற்கு வரும்போது எம்.எம்.டி.ஏ. அப்ரூவலோடுதான் வர வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் பத்திரப் பதிவு முடங்கியிருப்பதோடு, ரியல் எஸ்டேட் துறையும் வீழ்ச்சியடையும் என்றும் அஞ்சப் படுகிறது.

பஞ்சாயத்து ஒப்புதல் பெற, நீங்கள் வாங்கிய மனைகளுக்குண்டான வரைபட அங்கீகார ஜெராக்ஸ், சிட்டா, அடங்கல் ஜெராக்ஸ் மற்றும் புகைப்படத்துடன் நகர ஊரமைப்பு இயக்கத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதற்கான கட்டணத்தையும் செலுத்த வேண்டும். பின் டி.டி.சி.பி. அங்கீகாரம் கிடைத்துவிடும்.

மனைக்கு டி.டி.சி.பி. அனுமதி கேட்டு விண்ணப்பிப்பதற்குப் பதில், வீட்டு திட்ட வரைபடத்தை மொத்தமாக வைத்து அங்கீகாரம் கேட்கலாம். இது சிறந்த வழி. இதனால் கால விரயத்தை தடுக்கலாம்.

குறைந்த விலையில் கிடைப்பது பஞ்சாயத்து வீட்டு மனைகளே! பலரும் அதையே வாங்குகின்றனர். டி.டி.சி.பி அங்கீகாரம் இல்லாத மனைகளை வாங்கினால் அதற்காக நாம்தான் அலைவேண்டியிருக்கும். மேலும் பணமும் கூடுதலாகச் செலவழியும்.

மனைகளை வாங்கும்போதே டி.டி.சி.பி. அங்கீகாரம் பெற்றதா என்பதை பார்த்து வாங்கவும். திட்ட வரைபடத்தில் மனைகளுக்கு உண்டான அங்கீகார எண் குறித்து இருக்கும். அந்த எண்ணை வைத்து மனையின் நம்பகத்தன்மையை அறியலாம்.


மனைகளை வாங்கும்போது அதற்கு முன் அதனை யார் பயன்படுத்தினார்கள்? அவருக்கும் முன் யார் வைத்திருந்தார்கள் போன்றஉண்மைநிலைகுறித்தவிவரங்களை அறிய சார்பதிவாளர் அலுவலகத்தில் இ.சி. எனப்படும் வில்லங்கச்சான்று பெற்று அறியலாம். இது மட்டும் போதுமா? என பலர் கேட்கலாம். நீங்கள் வாங்கப்போகும் மனையில் அடங்கியுள்ள சர்வே எண்களின் வரலாறு என்ன என்பதை அறிந்தால் அந்த நிலம் இதற்கு முன் என்னவாக இருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

சார்பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்க சான்று வழங்குவது போலவே, நில அளவைத் துறையிலும் கிராமம், வட்டம், மாவட்டம் என அனைத்து பகுதிகளுக்கான வரைபடங்களை தயாரித்து, கட்டண அடிப்படையில் வழங்குகின்றனர். நீங்கள் வாங்கும் மனை அமைந்துள்ள கிராமத்தின் இப்போதைய மற்றும் முந்தைய வரைபடங்களை வாங்கிப் பார்த்தால், நீங்கள் வாங்கும் சர்வே எண்களின் ஜாதகம் தெரிந்துவிடும்.

இவ்வாறு தெரிந்து கொள்வதினால், ஏரி, குளம், வாய்க்கால், பாதை, இடுகாடு போன்ற பொது முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், போலி ஆவணங்கள் வாயிலான மனைகளாக மாற்றப்பட்டுள்ளதா என்பதையும் அறியலாம்.

சென்னையில் சேப்பாக்கம் நில அளவைத் துறை அலுவலகத்தில் இந்த வரைபடங்களை பெறலாம். தாங்கள் குறிப்பிடும் கிராமத்தின் வரைபடம் விற்பனைக்கு உகந்ததா என்பதை அறிந்து அதற்கான கட்டணத்தை செலுத்தலாம்.

கட்டணம் செலுத்தியவுடன் சம்பந்தப் பட்ட கிராம வரைபடத்தின் பிரதி உங்களுக்கு அளிக்கப்படும்.



**பக்கத்துவீட்டுகாரன் காய்ச்சல்ல இருக்கான்னு பாக்க போனேன்... என்னையா.... உடம்பு கொதிக்குது???? ன்னு கேட்டா...நெருப்புடா........ கபாலிடா..... ங்குறான் சாவுடா.... ன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.**

இந்த வரைபடம் தெளிவாகவும் அழகாகவும் இருக்காது. மிக பழைய படம் என்றாலும் ஒரு கிராமத்தில் அடங்கியுள்ள அனைத்து சர்வே எண்களின் விவரம் அதற்கான நிலங்கள் அவற்றின் பயன்பாடு, பொதுப்பாதை உள்பட தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

இன்றைய சூழலில் ஒவ்வொருவரும் பரம்பரை சொத்தை அடைய அலை கின்றனர். இதில் சிலர் தங்களுக்கான சொத்து மட்டுமின்றி அடுத்தவர் சொத்தையும் சேர்த்து ஆட்டையப் போட்டு விற்க முற்படுகின்றனர். இதில் பிரச்சனை உள்ளது.

ஒருவரின் சொத்து அவருக்கு தெரியாமல் இன்னொருவரால் அபகரிக்கப் பட்டால் எப்படி அணுகுவது என்பதே பலருக்கும் உள்ள கேள்வி. இதுபோன்ற தருணங்களில் அறிவுப்பூர்வமாக செயல்பட்டால்தான் பிரச்சனையை சமாளிக்க முடியும்.


ஒருவர் வீட்டுமனை வாங்குவதற்காக தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனத்தை அணுகும்போது மனைப்பிரிவை நேரில் பார்த்து ஆய்வு செய்யும்போது அது அமைந்துள்ள பகுதி சூழல் அனைத்து பிடித்துவிடுகிறது.

ரியல் எஸ்டேட் நிறுவனமோ உங்களிடம் எப்படியாவது 2 அல்லது 3 மனைகளை விற்றுவிட வேண்டும் என்று கங்கனம் கட்டிக்கொண்டு அலைகிறது. அதற்கான செயலிலும் இறங்குகிறது. ஒரு குறிப்பிட்ட தொகையை முன்பணமாக வைத்துக்கொண்டு, 15 வருடத்துக்கான வில்லங்க சான்று, தாய் பத்திரம் என பல்வேறு ஆவணங்களின் பிரதியை அந்நிறுவனம் கொடுக்கிறது.

மனைவாங்குபவரின் கூர்மையான சிந்தனையால், தனியாக சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தை அணுகி, 25 ஆண்டுக்கான வில்லங்க சான்றை வாங்கி பார்க்கிறார்.

அதில் தற்போது ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் பெயரில் உள்ள நிலம் அவர்களுக்கு வருவதற்கு முன் யாரிடம் இருந்ததோ அவருக்கு கிடைத்த விதத்தில் சில குழப்பங்கள் இருப்பது தெரிய வந்தது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட கிராம ஊர் தலைவர்வரிடம் விசாரித்தபோது, இந்நிலத்தில் உரிமையாளர் தற்கொலை செய்து கொண்டதாகவும் அவருக்கு வாரிசுகள் இல்லாததத்தால் அவரது சகோதரர் குடும்பத்தினர் தங்களை வாரிசுகளாக உறுதிப்படுத்தி சான்றிதழை தயாரித்து சொத்தை அபகரித்துக் கொண்டது தெரிய வந்தது.

தொடரும்...



## நவராத்திரி கொலு பொம்மைகள் கண்காட்சி

சேலம் மாவட்டத்தில் பூம்புகார் விற்பனை நிலையத்தில் நவராத்திரியை முன்னிட்டு கொலுபொம்மைகள் விற்பனைக் கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் பங்குகொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பத் கண்காட்சியைத் திறந்து வைத்தார். உடன் பூம்புகார் விற்பனை நிலைய மேலாளர் சேவியர்.

# மாணவர்கள் பக்கம்





JOSHINI ISHWARYA ESWARAN
STD IX-C,
GOOD SHEPHERED M.H.S. SCHOOL
CHENNAI





S. JANAGI
STD IX-A,
GOOD SHEPHERED M.H.S. SCHOOL
CHENNAI

# INCREDIBLE FACTS

1. Thomas Alva Edison light bulb inventor was afraid of dark.
2. Carrots have zero fat content.
3. A mature turkey has about 3500 feathers.
4. Tsunami waves as fast as set heaves.
5. The sun is 3300 times larger than the earth.
6. A spider’s blood is transparent.
7. Astronauts get taller when they are in space.
8. Wearing yellow makes you look bigger on camera green smaller.
9. Parlor melt in vinegar.
10. Months that begin on a Sunday will always have a Friday the 13th.



AISHWARYA H. MENON
STD IX-C,
GOOD SHEPHERED M.H.S. SCHOOL
CHENNAI



**மனைவி:** ஏன் இப்படிக் குடிச்சுக் குடிச்சுக் காசை வேஸ்ட்டாக்கறீங்க....

**கணவன்:** நீ மட்டும் ப்யூட்டிப் பார்லர் போயிப் பணத்த வேஸ்ட்டாக்கலியா...?

**மனைவி:** உங்க கண்ணுக்கு அழகாத் தெரியணும்னு தானே நான் என்னை அழகு படுத்திக்கறேன்...?

**கணவன்:** நானும் நீ அழகாகத் தெரியணும்னு தான் குடிக்கிறேன்....

# நோயை வெல்வோம்...

**“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்”**

எனும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப நமக்கு நோய் வருவது எதனால்? என்பதை அறிந்து கொண்டால் நோயை வெல்லலாம் இல்லையா?

- ✧ தும்மல்,
- ✧ மூக்கு ஒழுகுதல்,
- ✧ சளி,
- ✧ இருமல்
- ✧ காய்ச்சல்

இவற்றை நாம் வியாதி என கருதி அதை தடுக்க முயற்சிக்கும்போதுதான் இந்த கழிவுகள் தேங்கி இருக்கும் இடத்திலேயே நமது உடலால் கட்டியாக்கப்படும். பிறகு நமது உடலின் எதிர்ப்புசக்தி அதிகரிக்கும்போது காய்ச்சல் என்கிற செயல்முறையின் மூலம் வெப்பத்தை அதிகப்படுத்தி அந்த கட்டிகளை மற்றும் நமது உடலில் தேங்கிய இதர கழிவுகளையும் எரித்துவிடும்.

காய்ச்சலை ஏற்படுத்த போதுமான சக்தி இல்லாதபோது நமது உடலின் எஞ்சிய சக்தியை கொண்டு கழிவுகளை வெளியேற்ற முயற்சிக்கும்போது அந்த இடத்தில் வலி ஏற்படும். சிலநேரம் நமது எதிர்ப்பு சக்தி போதுமான அளவில் இல்லையென்றால் நமது உடலின் இயக்க சக்தி தேவைப்படும்.



அப்போதுதான் தலைவலி ஏற்படும். தலைவலி ஏற்பட்டால் நம்மால் எந்த வேலையும் செய்ய இயலாமல் ஓய்வு எடுப்போம். அதற்குதான் தலைவலி ஏற்படுகிறது. யாரெல்லாம் தலைவலி வந்தால் மருந்துகளின்றி ஓய்வு எடுக்கிறார்களோ அவர்களுக்கு ஒருபோதும் புற்றுநோய் வருவதில்லை.

யாரெல்லாம் காய்ச்சலுக்கு மருந்துகளின்றி மற்றும் பசிக்கவில்லை என உணவின்றி ஓய்வு மட்டுமே எடுக்கிறார்களோ அவர்களுக்கு Typoid, Jaundice, Chicken Guniya, Coma (விபத்துக்களால் ஏற்படும் Coma அல்ல), புற்றுநோய் (Cancer), ரத்த புற்றுநோய் (Blood Cancer) போன்ற தொந்தரவுகள் ஏற்படுவதில்லை. இவ்வாறு நமது உடலின் கழிவு வெளியேற்றத்துக்கு நாமே தடையாக இருந்துவிட்டு வியாதிகள் பெருகிவிட்டது என கூறுகிறோம். நமது உடலின் அடிப்படையை கற்றுக் கொண்டு மருந்துகளின்றி ஆரோக்கியமாக வாழ்வோம்.

**மோகன்ராஜ்**




கற்பனைக் கதை

# செல்லாத காசோலை தந்த செல்வாக்கு!



**உழைப்பு மட்டுமே ஒருவனுக்கு சிறப்பையும் செழிப்பையும் தரமுடியும். யாருடைய உதவியை மட்டுமே நம்பி இருக்காமல் தன்னுடைய உழைப்பை மட்டுமே நம்புபவர்களுக்குதான் செல்வாக்கு வந்து சேரும்**

ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடிகள் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்று அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்தார்...

அப்போது சற்று பெரிய மனிதர் போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டு

"ஏன் சோகமாக இருக்கிறீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு இவர் "எனது தொழில் நஷ்டம் அடைந்து விட்டேன். மிகவும் மனது உடைந்து போய்விட்டேன் " என்றார்.

"எவ்வளவு ரூபாய் நஷ்டம்?" என்றார் அவர்.

"50 கோடி ரூபாய்" என்றார் இவர்.

"அப்படியா, நான் யார் தெரியுமா?"என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வேந்தரின் பெயரை சொன்னார்.

அசந்து போனார் இவர்...

"சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா?" என்று கேட்டார் அவர்.

உடனே முக மலர்ச்சியுடன் இவர் "ஆமாம் எல்லாம் சரியாகி விடும்" என்றார்.

பின் அந்த செல்வேந்தர் ஒரு செக்கில் கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி "இந்தா இதில் 500 கோடிக்கு செக், நீ கேட்டதை விட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்த பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்து விட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்" என்று சொல்லி விட்டு செக்கை இவர் கைகளில் திணித்து விட்டு சென்றார்.

அதன் பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்திற்கு சென்றார். தன் அறைக்குள் சென்று அந்த செக்கை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களை நிர்வாகக் கூட்டத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய சொன்னார். ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார். "நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது, ஆனால் அந்த பணத்தை தொட மாட்டேன்.

இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது? எதனால் எதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன. தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டு களையப் பட்டன. மிக சரியாக அனைத்து ஊழியர் களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சு மூச்சு செயல் சிந்தனை தூக்கம் அனைத்து அவருடைய தொழிலை பற்றியே இருந்தது.

ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்


பட்டன. மிக சரியா 550 கோடி ரூபாய்கள் லாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம்.

அடுத்த நாள் விடிய காலை அந்த செல்வேந்த கொடுத்த 500 கோடிக்கான செக்கை எடுத்துக் கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார். சென்ற வருடம் அமர்ந்த அதே பெஞ்சில் அமர்ந்தார். காலை நெரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வேந்தரும் அவருக்கு அருகில் அவரை கைகளால் பிடித்துக் கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது. சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வேந்தரை காணவில்லை.

இவர் சென்று அந்த பெண்மணியிடம் "எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர்?" என்றார்.

அதற்கு அந்த பெண்மணி பதட்டத்துடன் "உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா?" என்றார்.

இவர் "இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள்?" என்றார்.



**என்ன சோதனை கடவுளே!**

**நாம வாழ்க்கைல எதாச்சும் சாதிக்கலாம்னு நினைக்கும்போதுதான், கடவுள் நமக்கு கதலியோ, மனைவியோ கொடுத்து சோதிச்சுடுறாறு 'முதல்ல இதை சமாளி மகனே' னு.**

அந்த பெண்மணி "இல்லை அய்யா அவர் ஒரு பைத்தியம். அதாவது மனநிலை சரி இல்லாதவர், செக் தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கை கிழித்து கையெழுத்திட்டு கொடுத்து விடுவார்" என்றார்.

ஒரு நிமிடம் அந்த நிறுவன தலைவருக்கு பேச முடியவில்லை. அப்போ நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். அதுவே நம்மை காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்தார்.

நம்மால் எதையும் செய்ய முடியும் என்று முதலில் நாம் நம்ப வேண்டும். அப்போதுதான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும்.

இந்த நம்பிக்கையை கற்றுத் தந்த அந்த மன நோயாளி குடும்பத்தையே வாழ்நாள் முழுவதும் காப்பாற்றினார்.

தன்னம்பிக்கை எதையும் வீழ்த்தும் அபார சக்தி மிக்கது.

# வழக்கறிஞர் வே. காசிநாதன் எழுதியப் புத்தகம்

வழக்கறிஞர் வே. காசிநான் பயனுள்ள பல நூல்களை எழுதியுள்ளார். சீதைப் பதிப்பத்தின் சார்பில் வெளி யிடப்பட்டுள்ள பாலித்தீவு ஒரு இந்து நாடு என்ற நூலும், காஷ்மீரில் எரியும் நெருப்பு என்ற நூலும் பலராலும் வெகுவாக பாராட்டப்படுகிறது. இந்தப் புத்தகத்தை தி.மு.க. தலைவர் திரு.மு.கருணாநிதி அவர்களிடம் கொடுத்து எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் வாழ்த்துப் பெறுகிறார் வே. காசிநாதன். உடன் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா. மாநிலங்களவை டி.கே. எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.





## நடனப் பிரியை ஸ்ரேயா...

"எனக்கு சிறுவயதில் இருந்தே நடனத்தில் ரொம்ப இஷ்டம். அதை புரிந்து கொண்டு நடனம் கற்றுக்கொடுத்து என்னை அதில் சாதனை புரிய வைத்தவர் எனது அம்மா. எனவே எனக்கு அம்மாதான் குரு. குழந்தைகளை பெற்றோரை விட சிறந்த திறமைசாலிகளாக மாற்றுவது ஆசிரியர்கள்தான்.

அதனால் குருவே தெய்வம் என்பதை நான் கடைபிடிக்கிறேன். ஆசிரியர்களை அடிக்கடி சந்திக்க முடியாவிட்டாலும் அவர்களை எப்போதும் மனதில் நினைக்க வேண்டும்." இவ்வாறு ஸ்ரேயா கூறினார்.

**புள்ளைகளா! திருந்திருங்க...**





## தயாரிப்பாளர் காலில் விழுந்த டாப்ஸி

அனிருத்தா ராய் சவுத்ரி இயக்கத்தில் அமிதாப் பச்சன், டாப்ஸி உள்ளிட்டோர் நடித்துள்ள பிங்க் இந்தி படம் பாக்ஸ் ஆபீஸில் வசூலை அள்ளிக் குவித்துக் கொண்டிருக்கிறது. பத்திரிகையாளர் சந்திப்பின்போது, டாப்ஸி படத்தின் தயாரிப்பாளர் ஷூஜித் சர்காரை பார்த்து எனக்கு இந்த கதாபாத்திரத்தை அளித்ததற்கு நன்றி என்று கூறி அவரது காலைத் தொட்டு கும்பிட்டார்.

"நான் சீக்கிய பெண். எங்கள் சமூகத்தில் யார் காலையும் தொட்டுக் கும்பிட மாட்டோம். அதனால் காலைத் தொட்டு கும்பிட எனக்கு தெரியாது" என்று டாப்ஸி கூறி ஷூஜித்தின் காலை தொட்டுக் கும்பிட்டார். உடனே ஷூஜித்துக்கு அழுகை வந்துவிட்டது.

## மோடிக்கு புகழாரம்! சிக்கலில் ஐஸ்வர்யா



அபிஷேக் பச்சனை ஐஸ்வர்யா திருமணம் செய்த நாளிலிருந்து, குடும்பத்தில் பிரச்னை என இதுவரை எந்த செய்தியும் வெளியானதில்லை.

ஆனால் தற்போது மாமியார் ஜெயா பச்சனுக்கும், மருமகள் ஐஸ்வர்யாவுக்கும் இடையே பனிப்போர் நடப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதற்கு காரணம் ஐஸ்வர்யா நரேந்திர மோடியை புகழ்ந்தது தான் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதாவது, சமீபத்தில் குஜராத் சென்றிருந்த ஐஸ்வர்யா ராய் அம்மாநிலத்தின் வளர்ச்சியையும், மோடியையும் புகழ்ந்து பேசினார்.

ஆனால் ஜெயாவுக்கு மோடி என்றால் அறவே பிடிக்காது, இதுதான் இருவருக்கும் பிரச்னை ஏற்பட காரணம் என கூறப்படுகிறது.

## வெளிவ

தீபாவளிக்கு ரசிகர்களுக்கு விருந்த
அஜீத் நடிக்கும் படங்கள் முடிவடைய
தனுஷ், கார்த்தி, விஷால், ஜி.வி.பிரகாவ்

முதன்முறையாக தனுஷ் இருவேட
அரசியல் பின்னணியில் இயக்கி இருக்கி

மொட்டையடித்து புதிய கெட்டப்பி
கோகுல் இயக்கி உள்ளார். சரித்திர பி
அமைக்கப்பட்டிருக் கிறது.

விஷால் நடித்திருக்கும் படம் கத்திச்
தமன்னா கதாநாயகி. நீண்ட வருடங்க
சூரியும் நடிக்கிறார்.

இயக்குனர் எம்.ராஜேஷ் டைரக்ஷ
கல்ராணி ஹீரோயின். ரொமான்ஸ்,
நடிக்கும் சைத்தான் உள்ள
போஸ்ட் புரொடக்ஷ

# கோலிவுட்



## தல போல வருமா...

தமிழ் சினிமா ரசிகர்களால் ‘தல’ என்று அன்போடு அழைக்கப்படும் நடிகர் அஜித். தன்னுடைய ரசிகர் மன்றத்தை கலைத்த பிறகு இவருக்கான ரசிகர்கள் கூட்டம் மட்டும் குறையவே இல்லை. பல்வேறு முன்னணி நடிகைகளும் இவரோடு ஜோடி போட்டு நடிக்க ஆர்வம் காட்டி வரும் நிலையில், உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றான புருனே நாட்டின் இளவரசி அஜித்தை பார்க்க ஆர்வம் காட்டியுள்ளார்.

உலகிலேயே தங்கத்தால் அலங்கரிக்கப் பட்ட ஆடம்பரமான அரண்மனை புருனே நாட்டில்தான் உள்ளது. புருனே மன்னர்களும், இளவரசர்களும் ஆடம்பர சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். ‘வேதாளம்’ படத்தில் இடம்பெற்ற ‘ஆலுமா டோலுமா’ பாடலை கேட்டு அசந்துபோன புருனே நாட்டு இளவரசி, என்ன அழகு, என்ன கம்பீரம், சிரிக்கும்போது அப்படியே மனதை அள்ளுகிறார். அவரை சந்திக்க உடனே ஏற்பாடு செய்யுங்கள். அவர் வர சம்மதித்தால் உலகமே வியக்க விருந்து ஏற்பாடு செய்யுங்கள் என்று தனது மெய்க்காப்பாளர்களுக்கு உத்தரவு போட்டுள்ளாராம் இளவரசி.

மெய்க்காப்பாளர்களும் இளவரசியின் கட்டளையை நிறைவேற்றும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்களாம்.

## ஜோ... ஜோ... ஜோதிகா...

ஜோதிகா முன்னணி நடிகையாக இருந்த போதே சூர்யாவை திருமணம் செய்துகொண்டு சினிமாவை விட்டு ஒதுங்கினார். பின் 8 வருடங்களுக்கு பிறகு 36 வயதினிலே படத்தில் நடித்தார்.

இந்த படமும் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. இப்படத்திற்காக இவர் ஒரு சில விருதுகளையும் பெற்றார். இந்நிலையில் இவர் மீண்டும் ஒரு படத்தில் நடிக்கவுள்ளார்.

இப்படத்தை ‘குற்றம் கடிதல்’ படத்தை இயக்கிய பிரம்மா இயக்கவுள்ளார். இப்படத்தின் கதாபாத்திரத்திற்காக சில பயிற்சிகள் எடுக்கவேண்டுமாம். அதற்காக ஜோ நடிப்பு பயிற்சிக்கு பயிற்சி எடுக்க போகிறாராம்.



## தீபாவளிக்கு
## ...நம் திரை வெடிகள்...

...ாக பல படங்கள் வெளியிட இயக்குனர்கள் முயன்று வருகின்றனர். கமல், விஜய், ...ாததால் பொங்கல் அல்லது அதற்கு பிறகு ரிலீஸ் ஆக உள்ளது. இதற்கிடையில் ...ஷ நடித்துள்ள 4 படங்கள் தீபாவளி மோதலுக்கு தயாராக உள்ளது.

...ங்களில் நடித்திருக்கும் படம் ‘கொடி’. திரிஷா ஜோடி. மற்றொரு நாயகி ஷாம்லி. ...கிறார் துரை செந்தில்குமார்.

...ல் கார்த்தி நடித்திருக்கும் படம் காஷ்மோரா. நயன்தாரா, ஸ்ரீதிவ்யா ஹீரோயின். ...ின்னணியிலும் இன்றைய காலகட்டத்திலும் சம்பவங்கள் நடப்பதுபோல் திரைக்கதை


...ச் சண்டை. காமெடி, சென்டிமென்ட், ஆக்ஷன் கலந்து படத்தை இயக்கியுள்ளார் சுராஜ். ...ளுக்கு பிறகு வடிவேலு மீண்டும் காமெடி வேடத்தில் நடிக்கிறார். முக்கிய வேடத்தில்

...ஷனில் ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் படம் கடவுள் இருக்கான் குமாரு. ஆனந்தி, நிக்கி ... காமெடி கதையாக உருவாகி உள்ளது. இது தவிர விஜய் ஆண்டனி ...ரிட்ட இன்னும் சில படங்கள் போட்டியில் குதிப்பதற்காக வேகமாக ...ஷன் பணிகள் நடந்து வருகிறது.



✧ சென்னை : ரோந்து பணியில் ஈடுபடும் போலீஸாருக்காக 250 சைக்கிள் ஜெயலலிதா!
✧ ஒரு தாய்க்கு தான் தெரியும் தன் பிள்ளைகளின் தொப்பையை எப்படி குறைக்க வேண்டும் என்று !

# பொருளாதார மேதை ஆடம்ஸ்மித்



**பொ**ருளியல் என்பது பொருளாதாரத்தைக் குறிக்கும். பொருளாதாரம் என்பது பொருளுக்கு ஆதாரமாக உள்ள அடிப்படை விஷயங்களை அறிந்து கொள்ளும் பகுதியாகும்.

பொருளை உருவாக்கிட ஆகிடும் உற்பத்தியைப் பற்றிய சிந்தனை விரிவாக இருந்தால்தான் தொழில்வளம் பெருகும். தொழிலில் சிறக்க முடியும். அத்தகைய பொருளாதார சிந்தனையை நமக்குள் விதைத்தவர் ஆடம்ஸ்மித்.

பொருளாதாரத்தைப் புரிய வைத்த ஆடம்ஸ்மித் 1723-ல் ஸ்காட்லாந்தில் பிறந்தார். இன்றைய பொருளியலின் தத்துவத்தை விளக்குகின்ற முதல் புத்தமாக ஆடம்ஸ்மித் எழுதிய "நாடுகளின் செல்வம்" என்ற புத்தகத்தைக் குறிப்பிடுகின்றனர். முந்தைய காலங்களில் நிலவிய பல தவறான பொருளாதாரக் கொள்கைகளை நெறிப்படுத்தும் கருத்துக்களை இந்தப் புத்தகத்தில் ஆடம்ஸ்மித் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

பணம்தான் செல்வம் என்றும் ஒரு அரசாங்கம் தங்கத்தை தன்னிடம் வைத்துக் கொண்டால் போதுமென்று ஒரு நாடு நினைப்பதை ஆடம்ஸ்மித் மறுத்துள்ளார். மாறாக உழைப்பு ஒன்றுதான் பொருளாதாரத்தை உயர்த்தும் என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அந்த உழைப்பு கூடுதலாகும்போது உற்பத்தியும் கூடுகிறது. உற்பத்தி பெருகும்போது ஊதியமும் உயருகிறது. ஊதியம் உயரும்போது ஜனங்களின் மத்தியல் பணநடமாட்டம் அதிகரிக்கிறது. இதைத்தான் பொருளாதாரம் சீராடைந்துள்ளதாக பல நாடுகளைக் கொண்டு அறியலாம். எனவே மக்கள் உழைப்பின் மூலமே தங்கள் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என்பதை புரிய வைத்தவர் ஆடம்ஸ்மித்.

நம்முடைய மித்ரா டைம்ஸ் இதழில் தொடராக வெளிவந்த கட்டுரைகள் அனைத்தும் பல்வேறு புத்தகங்களில் வெளிவந்த அறிஞர் பெருமக்களின் எண்ணங்களில் உதித்தவை. ஏட்டில் எழுதி வைக்கும் தத்துவார்த்தமான சிந்தனைகள் மட்டுமே ஒரு செயலுக்கு தீர்வாகாது. எழுத்தில் வரும் சொற்களோடு செயலின் அனுபவமும் தான் சிறந்த நிர்வாகியை தீர்மானிக்க முடியும். நிர்வாகத்தைத் திறம்பட கையாள்பவரே சிறந்த நிர்வாகியாவர். அது எந்த நிர்வாகமாக இருந்தாலும் சரி. ஆட்சி நிர்வாகம், அலுவலக நிர்வாகம், உற்பத்தி தொடர்பான நிர்வாகம், குடும்ப நிர்வாகம் தொழில் நிர்வாகம், விற்பனை நிர்வாகம் என்பன போன்ற நிர்வாகங்களில் அனுபவமே அவர்களுக்கு கைக்கொடுத்து வந்துள்ளது.



# நீங்களும் நிர்வாகியாகலாம்

ரிலையன்ஸ் அம்பானியானாலும் கிராமத்து விவசாயி ஆனாலும் நிர்வாகத்தை சீராக வைத்துக் கொண்டால்தான் வெற்றி பெற முடியும். குடும்ப நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால் குடும்ப தலைவரோ அல்லது தலைவியோ தான் நிர்வாகியாக கருதப்படுகிறார். குடும்ப உறுப்பினர்களின் செயல்பாடுகள் அதாவது, பிள்ளைகளின் கல்வியானாலும் திருமணமானாலும் அதை சரிவர கையாளத்தெரிந்தவரே சிறந்த நிர்வாகியாகிறார்.

குடும்பத்துக்கு வரவேண்டிய வருவாயை திட்டமிடுதலும், வருகின்ற வருவாய்க்குள் குடும்பத்துக்கு ஏற்படுகின்ற செலவைக் கட்டுக்குள் கொண்டுவரும் நிர்வாகமே சிறந்த குடும்ப நிர்வாகமாகும். ஏனென்றால்,

"ஆன முதலில் அதிகம் செலவானால்

மானம் அழிந்து மதிகெட்டு போன திசை

எல்லாம் எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயனாய் நல்லார்க்கும் பொல்லாதவனாய் ஆவான்" என்ற இலக்கியப் பாடல் கூறுவதைப் போல குடும்பத்தை நிர்வகிப்பவர் பொருளாதாரத்தை சரிவர கையாளாவிட்டால் அவரால் குடும்பத்தை வழிநடத்த முடியாது....

தொடரும்...



# உலகத்தை ரசிங்க... அனுபவிங்க...சிரிங்க...

- ✧ கிச்சுகிச்சு மூட்டும் போது வரும் அடக்கமுடியாத சிரிப்பு... கடைசி தீக்குச்சிக்கு காட்டும் பொறுப்பு.. மொட்டமாடி தூக்கம் .. திருப்தியான ஏப்பம்...
- ✧ கூட்டமான பஸ்ல , நா அடுத்த ஸ்டாப்பிங்ல எறங்கிருவேன், நீங்க உக்காந்துக்கோங்க என்ற வார்த்தை...
- ✧ நாம் செய்யும் மொக்க மேஜிக்கை வியந்து ரசிக்கும் குழந்தை..7 கழுதை வயசானாலும் நமக்கு திருஷ்ட்டி சுத்தும் பாட்டி..
- ✧ பாட்டியிடம் பம்மும் தாத்தா ...
- ✧ தலைவர் படம் ஃபர்ஸ்ட் டே ஃபர்ஸ்ட் ஷோ கிடைத்தவுடன் விடும் பெருமூச்சு ...
- ✧ தாகம் தணித்த போர் வெல் பைப் தண்ணி..
- ✧ பத்து ரூவா சேஞ்ச் குடுங்கனு, கடைக்காரன் மூஞ்சிய காட்டும்போது , எப்பவோ பர்ஸ்ல வெச்ச இத்து போன பத்து ரூவா...
- ✧ நோட்புக்கின் கடைசிப்பக்கம்... கொளுத்தும் வெயிலிலும் முகமூடி அணியாத makeup இல்லா அழகி ... பல வருடம் ஆனாலும் நம் குறும்பை மறந்து , நம்மை மறக்காத ஆசிரியர் ...
- ✧ தூங்க தோள் கொடுத்த சக பயணி ....
- ✧ எரிந்து முடிந்த கம்ப்யூட்டர் சாம்பிராணி .. பாய் வீட்டு பிரியாணி ..
- ✧ பார்த்த நொடியில் உரிமை எடுத்துகொள்ளும் பால்ய நண்பன்..
- ✧ இப்பவும் டேய் என அழைக்கும் தோழி ..
- ✧ இரவு 2 மணிக்கு கதவை திறந்துவிடும் அம்மா ...
- ✧ கோபம் மறந்த அப்பா..
- ✧ சட்டையை ஆட்டய போடும் தம்பி.. அக்கறை காட்டும் அண்ணன்.. அதட்டும் அக்கா ... மாட்டி விடாத தங்கை ..
- ✧ சமையல் பழகும் மனைவி ... புடவைக்கு பிளீட்ஸ் எடுத்துவிடும் கணவன்..
- ✧ இதுவரை பார்த்திராத பேப்பர் போடும் சிறுவன்.. ஹார்ன் அடித்து எழுப்பிவிடும் பால்காரர்...
- ✧ வழிவிடும் ஆட்டோ காரர்... ஹை பீம் போடாத லாரி டிரைவர்
- ✧ ஊசி போடாத டாக்டர்.. சில்லறை கேட்காத கன்ரெக்டர்...
- ✧ சிரிக்கும் போலிஸ்... முறைக்கும் காதலி..
- ✧ உப்பு தொட்ட மாங்கா.. அரை மூடி தேங்கா..
- ✧ 12 மணி குல்பி.. ஏ.டி.எம்.ஏ.சி.,
- ✧ மரத்தடி அரட்டை.... தூங்க விடாத குறட்டை....
- ✧ புது நோட் வாசம்.. மார்கழி மாசம்..
- ✧ ஜன்னல் இருக்கை.. தும்மும் குழந்தை..
- ✧ கோவில் தெப்பகுளம்.. எக்ஸிபிஷன் ப்பளம்..
- ✧ முறைப்பெண்ணின் சீராட்டு ... எதிரியின் பாராட்டு..
- ✧ தோசைக்கல் சத்தம் .. எதிர்பாராத முத்தம் ...பிஞ்சு பாதம்..
- ✧ இதை எழுதும் நான்.. படிக்கும் நீங்கள்..

இன்னும் நிறைய இருக்கு இந்த உலகத்துல ரசிக்க.. வாழ்க்கைய வெறுக்க ஹை ஹீல்ஸ் அளவுக்கு பெருசா 10 காரணம் இருந்தாலும் அதை ரசிக்க மினி மீல்ஸ் மாதிரி வெரைட்டியான விஷ்யங்கள் நிறைய இருக்கு .. அதையெல்லாம் வாட்டர் டேங்க் அளவுக்கு வாய திறந்து ரசிக்கனும்னு இல்ல ... வாட்டர் பாக்கெட் அளவுக்கு மனச திறந்து ரசிச்சாலே போதும்.... கவலை காலி ஆயிரும்... வாழ்க்கை ஜாலி ஆயிரும்.. பேஸ் ப்ரெஸ் ஆயிரும்



### வலிக்குதே...!

உண்மை சுளீரென ஒரு அடி கொடுத்து விட்டுவிடும். பொய், டைம் கிடைக்கும் போதெல்லாம் கூப்பிட்டு அடிக்கும்.

# சினிமா மார்க்கண்டேயன் சிவகுமார்

**1956-ல் திரையில் அறிமுகமானவர் நடிகர் சிவக்குமார். சிறந்த நடிகர் ஆக பிரகாசித்தவர். அவர் பிள்ளைகளான நடிகர் சூர்யா, கார்த்திக் இருவருமே திரையுலகப் பயணம் தொடங்கிய காலத்தில் தனது திரைப் பயணத்தை நிறுத்தி இலக்கிய மேடைகளில் சிறந்த பேச்சாளராக கவிதையாளராக தன் பயணத்தைத் தொடங்கினார். அவரது மருமகளான நடிகை ஜோதிகா, பேரன் பேத்தி என குடும்பம் பெரிதான பின்பும் இன்னமும் இளமையாக வலம்வரும் சிவக்குமார் தனது இளமையின் அனுபவங்களை மித்ரா டைம்ஸ் பத்திரிக்கையில் பகிர்ந்து கொள்கிறார்.**



'என் உடலாகிய வண்டிக்கு நான்தான் டிரைவர். கரடுமுரடான பாதைகளில் வண்டியை ஓட்ட நேரிடலாம். எப்படிச் சாமர்த்தியமாக ஓட்டுகிறோம் என்பதில்தான் இருக்கிறது சூட்சமம். இதற்குத் திறமையும் பக்குவமும் முக்கியம். படித்தவை, கேட்டவை, கற்றுக்கொண்டவை, கற்பனை, ஆர்வம் எல்லாவற்றுக்கும் ஒரு ஈடுபாட்டுடன் தீனி போட்டேன். உடலும் மூளையும் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கிற சூத்திரம் எனக்கு இப்படித்தான் கிடைத்தது. விடிந்தும் விடியாத காலை நாலரை மணிக்கு எழுந்துவிடுவேன். பிரஷால் பல் துலக்கிய பிறகும், விரலால் ஒரு முறை தேய்ப்பேன். இதனால், பற்கள் ஒரே சீராக இருக்கும். பிறகு காலைக் கடன்களை முடித்துவிட்டு, இரண்டு டம்ளர் தண்ணீர் குடிப்பேன். அமைதியான, பசுமை நிறைந்த போட் கிளப் சாலையில் வாக்கிங் போவதே பேரானந்தமாக இருக்கும். 50 நிமிடங்கள் நல்ல காற்றை சுவாசித்துவிட்டு வரும்போது, உடம்பில் ஒருவித புத்துணர்வு கிடைக்கும். அது நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்க உதவும். விழிகள் எப்போதும் ஈரப்பதத்துடன் இருக்க வேண்டும். காலையில் பத்திரிகைகள் படிப்பதுகூட கண்களைக் களைப்பாக்கும்... நீங்கள் கண்களைப் பராமரிக்காமல் இருந்தால்!விழிகளை இட வலமாக 20 முறையும், மேலும் கீழுமாக 40 முறையும் நன்றாகச் சுழற்றுவேன். பிறகு குளிர்ந்த தண்ணீரில் கழுவுவேன். கண் சோர்வில்லாமல், பார்க்கும் பொருட்கள் 'பளிச்'சென தெரியும். டிவி, கம்ப்யூட்டரில் மூழ்கி இருக்கும் இந்தக் காலப் பிள்ளைகளுக்கு இந்தப் பயிற்சி ரொம்பவே நல்லது.உடல் சுத்தம் உற்சாகத்தைத் தரும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஆலிவ் ஆயில் தேய்த்துக் குளிப்பதையும், இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தலைக்கு விளக்கெண்ணெய் தேய்த்துக் குளிப்பதையும் வழக்கமாகவே வைத்திருக்கிறேன். இன்றும் என் தலைமுடி கருமையாக இருப்பதுடன் வெயிலில் சென்றாலும், உடல் குளிர்ச்சியாக இருப்பதையும் உணர முடிகிறது. 14 வயதில் எனக்குத் தொப்பை இருந்தது. சென்னைக்கு வந்தபோது, 'இந்த மாதிரி தொப்பை இருந்தால் வியாதிதான்' என்றார் ஒரு பெரியவர்.

அதனால், யோகா பயில ஆரம்பித்தேன். ஆறே மாதங்களில் 38 வகையான ஆசனங்களைக் கற்றுக்கொண்டேன். 16 வயதில் ஒட்டியானா என்கிற ஆசனத்தைச் செய்து, தொப்பையைக் குறைத்தேன். இந்த ஆசனம் செய்யும்போது வயிறு நன்றாக ஒட்டிவிடும்.என்றைக்கு நம்மால் குனிய முடியாமல்போகிறதோ, அப்போதே வயதாகிவிட்டது என்று அர்த்தம். வயோதிகம் வந்தால் கணுக்கால், முழங்கால்களில் வலியும் தானாகவே வந்துவிடும். வஜ்ராசனம் செய்வதன் மூலம் வலி இல்லாமல் இருக்கலாம். குனிந்து ஷூவுக்கு லேஸ்கூட கட்ட முடியாமல் போகும் இந்தக் காலப் பிள்ளைகள் வஜ்ராசனம் செய்வது நல்ல பயனைத் தரும். வாரியார் சுவாமிகள் 90 வயது வரை 'வஜ்ராசனம்' செய்து உடலைக் கம்பீரமாக வைத்திருந்தார்.சிரசாசனம் செய்வதன் மூலம் மூளை வரை ரத்தம் பாய்வதை உணர முடியும். ஞாபக சக்தி அதிகரிக்கும். இந்த ஆசனம் செய்வதால் மூளை அதிவேகமாகச் செயல்படும். முதுகை

வளைத்து செய்யக்கூடிய புஜங்காசனம் செய்வதால், எலும்புகள் உறுதியாக இருக்கும். இப்படி உடல் உறுப்புகளுக்கான ஆசனங்கள் ஏராளமாக இருக்கின்றன.அத்தனை ஆசனங்களும் எனக்கு அத்துப்படி என்றாலும், தற்போது 8 ஆசனங்கள் மட்டுமே செய்துவருகிறேன். ஒரு நாள் யோகா செய்தால், மறுநாள் வாக்கிங் என்று மாறி மாறி செய்வேன்.பழம்பெருமை பேசுவது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. பாராட்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது இல்லை. 'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்ற நினைப்பு இருந்தால், எல்லாத் துறைகளிலும் சாதிக்க முடியும் என்பது என் அசராத நம்பிக்கை. எதிலும் தாமரை இலைத் தண்ணீர்போல்தான் இருப்பேன். அதற்காக, உறவுகளிடமும் நண்பர்களிடமும் பாசத்தை வெளிப்படுத்துவதில் வஞ்சனை காட்ட மாட்டேன்.இந்தக் காலப் படிப்புகள் பெரும்பாலும் சம்பாதிக்கத்தான் வழிவகுக்கின்றன. பல பள்ளிகளில் விளையாட்டு மைதானமே இல்லை என்பது வருத்தப்பட வேண்டிய விஷயம்.

ஒழுக்கம்

ஆரோக்கியத்தையும் கோட்டை விட்டுவிடுகிறது இன்றையக் கல்விமுறை. படித்து முடித்து கை நிறையப் பணத்தைப் பார்த்ததும் கஷ்டப்பட்டக் காலத்தை மறந்து, பணத்தைத் தண்ணீராகச் செலவு செய்கின்றனர். உடல் ஆரோக்கியத்தின் மீதும்அலட்சியமாக

இருக்கிறார்கள். வயது ஏறும்போது, வியாதிகள் வாட்டும்போதுதான் உடலின் மீதான அக்கறையும் ஆரோக்கியத்தின் மீதான பயமும் நம்மை ஆட்டிப்படைக்கும். மது, புகை, மாது போன்ற எந்தப் பழக்கமும் எனக்கு இல்லை. தொழிலுக்காகப் பல பெண்களுடன் நெருக்கமாக நான் நடித்திருந்தாலும், யாருடனும் நான் தவறான உறவு வைத்திருந்தது இல்லை. இதில் எனக்குப் பெருமையும் உண்டு.

தவறுகளுக்கான சந்தர்ப்பங்கள் வாய்த்தாலும் அதில் சிக்காமல் மீண்டுவரக் கூடிய மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். 5 பாதாம், 15 உலர் திராட்சை, 2 பேரீச்சம்பழம், 1 அத்திப்பழம், 1 வால் நட் இவைதான் என் காலை உணவு. அவ்வப்போதுநாக்கு கேட்கும் ருசிக்காக இரண்டு இட்லி பச்சை சட்னி அல்லது பொங்கல் அல்லது ஆசைக்கு ஒரு தோசை சட்னி சாப்பிடுவேன்.

மதியம் சாதம், கூட்டு, பொரியல், பச்சடி, கீரையுடன் சப்பாத்தியும் இருக்கும். மாலை 4 மணிக்கு ஜூஸ், இளநீர் குடிப்பேன். எப்போதாவது டீ, பிஸ்கட். இரவு நேரத்தில் வெஜ் சாலட் சட்னி. நாக்கு கேட்டால் மட்டும் அரிதாக நளபாக விருந்து. அதிலும் எண்ணெய் உணவுகள் அளவோடுதான் இருக்கும். அசைவ உணவுகள் சாப்பிடுவதை நிறுத்தி 40 வருடங்களுக்கு மேல் ஆகிறது. வயது ஏற ஏற ஜீரண சக்தி குறையும். 50 வயதை நெருங்குபவர்கள் சைவத்துக்கு மாறுவதுதான் நல்லது. சைவம் சாப்பிடுவதால்

உடம்பில் தேஜஸ் கூடுவதை நன்றாக உணர முடிகிறது.

தூக்கத்தைத் தொலைத்தால் ஆயுள் குறையும். 9.30 மணிக்குள் படுக்கைக்குச் சென்றுவிடுவேன். படுக்கும்போது, தியானம் செய்வது என் வழக்கம். இதனால் மனம் ஒருநிலைப்பட்டு, நிம்மதியான நித்திரை கிடைக்கும். இப்படி வரைமுறைக்குள் என் வாழ்க்கையை வகுத்துக்கொள்வதால் உடலும் மனமும் எப்போதும் உற்சாகமாகவே இருக்கிறது. வாழ்வில் எவ்வளவுதான் சம்பாதித்தாலும் தேவைகளைக் குறைத்துக்கொள்கிறவனே உண்மையான செல்வந்தன். அதிகம் நான் ஆசைப்படுவது இல்லை. சம்பாத்தியத்தில் ஒரு சிறு பங்கை ஏழைகளுக்கு உதவுவதையும் வழக்கமாக வைத்திருக்கிறேன். பாகுபாடு இல்லாமல் பாசத்தைப் பகிர்ந்துகொள்வதே பேரின்பம். இதுவே என் வாழ்வில் நான் கடைப்பிடிக்கும் காயகல்பம்'' என்கிறார் உற்சாகமாக மார்க்கண்டேயன் சிவக்குமார்!

நன்றி!

**✧ பட்டர்ஃப்ளை என்றவுடன் "லவ்வர்" ஞாபகம் வந்தால் நீ காதலன்.. "குக்கர்"ஞாபகம் வந்தால் நீ கணவன்.**

# அப்பாவுக்கு ஒரு காங்கிரஸ்! மகனுக்கு ஒரு காங்கிரஸ்!








**எங்களுக்கும் வேலை இருக்கும்ல**

**நாம போகும்போது பூனை குறுக்கே போச்சுன்னா என்ன அர்த்தம்? அதுவும் எங்கயோ போகுதுன்னு அர்த்தம்....!**



# கபாலிகான் நியூஸ்




# நான் சிரித்தால் தீபாவளி ! ஹோய்...

தீபாவளி அல்லது தீப ஒளித்திருநாள் என்பது ஐந்து நாட்கள் கொண்டாடப் பெறு கின்ற ஓர் இந்துப் பண்டிகையாகும். இப்பண்டிகை ஐப்பசி மாதத்தில் திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை மற்று ம் அதற்கடுத்த சுக்கிலப்பிரதமை, பௌ-பீஜ் ஆகிய நாட்களில் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் சில ஆண்டுகளில் ஐப்பசி அமாவாசை முன் தினம் நரக சதுர்த்தசி அன்று கொண்டாடுகிறார்கள். பெரும்பாலானஆண்டுகளில் தீபாவளி ஐப்பசி அமாவாசை தினத்தன்றே வரும். கிரகொரியின் நாட்காட்டி படி அக்டோபர் மாத 17லிருந்து நவம்பர் மாத 15 ம்தேதி வரையான நாட்களில் தீபாவளி வருகிறது.







தீபங்களின் அணிவரிசையாம் தீபாவளி பண்டிகை, பழங்காலம் முதலே கொண்டாடப்பட்டு இருக்கலாம் என வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் தெரி வித்துள்ளனர். தீபாவளி என்றால் பட்டாசு, இனிப்பு வகைகள், சினிமா, லேட்டஸ்டாக பார்க்கும் படம் என எண்ணற்ற காரியங்கள் நமக்கு தெரியும். ஆனால், தீபாவளிக்கென ஒரு வரலாறு உள்ளது. தீபாவளி கொண்டாட முக்கிய காரணம், கிருஷ்ணரின் லீலை தான் என்பது யாவரும் அறிந்ததே. உலகில் தீய சக்தியாக இருந்த நரகாசூரனை, வீழ்த்தி வெற்றிப் பெறுகிறார் கிருஷ்ணன்.

ஆனால் அதேசமயம் அந்த தீயவனின் விண்ணப்பத்தையும் ஏற்றுக் கொள்கிறார். அதனால் தோன்றியதான் தீபாவளி.

இந்த சம்பவத்திற்கு பின் கிருஷ்ணன் வெற்றி வீரனாக தனது சகோதரியின் வீட்டிற்கு செல்கிறார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பும், இனிப்பும் வழங்கப்படுகிறது. இதனால் தான், தீபாவளியன்று அனைவரும் நண்பர்கள், உறவினர்களிடையே



# தில்லை வள்ளல் - ராஜன் இல்லத்திருமண விழா



**திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினர்கள் இடமிருந்து வலம் சேகர், தாம்பரம் தொகுதி எம்.எல்.ஏ. எஸ்.ஆர். ராஜா,** *மணமக்கள் விஜயராஜன்-சிந்துஜா,* **மித்ரா குழும நிறுவனர் எம்.எஸ்.மூர்த்தி மற்றும் மணமகன் தந்தை ராஜன் (எ) ராஜு**

இராமநாதபுரம் மாவட்டம், ர.பி.ராஜன் திருமதி. ராஜலஷ்மி ராஜன் அவர்களின் மூத்த மகன் கேப்டன் ரா. விஜயராஜனுக்கும், நெல்லை மாவட்டம் டாக்டர்.சு.தில்லை வள்ளல் திருமதி.லீலா அவர்களின் மகள் டாக்டர் ஸ்ரீ சிந்துஜா-க்கும் **14-9-16** அன்று சென்னை சாந்தோம் மேயர் ஸ்ரீ ராமநாதன் செட்டியார் சென்டர், வள்ளியம்மை ஹாலில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், திரையுலக நட்சத்திரங்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

**இனிப்புகள் வழங்கும் பழக்கம் தோன்றலானது. தீபாவளி இந்தியாவில் மட்டுமல்ல, நமது அண்டை நாடுகளான வங்காளதேசம், இலங்கை, மலேசியா உள்ளிட்ட நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. ஆனால், பெயர்களும் கொண்டாடும் முறைகளிலும் மாற்றம் உள்ளது. தமிழ் மன்னர்களுக்கு பண்டைய காலத்தில் ரோம், எகிப்து, பாபிலோன், கிரேக்கம், பாரசீகம் என பல உலக நாடுகளுடன் வர்த்தக தொடர்பு இருந்தது.**

**செழிப்பான இந்தியாவில் இருந்து வாசனை திரவியங்கள், மூலிகைகள், தந்ததங்கள், ஏன் குரங்குகள் கூட கொண்டு சென்றதாக வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. அந்த வணிக தொடர்பின் போது, இந்தியாவில் இருந்து சென்ற பல வாணிகர்களும் தாங்கள் இருந்த இடத்தில் பொங்கல், தீபாவளி பண்டிகைகளை கொண்டாடி உள்ளனர். இதனால் அங்கும் இந்திய கலச்சாரம் பரவ ஆரம்பித்தது. முகாலய மன்னர்களில் சிலர் கூட தமிழர் பண்டிகைகளை ஆதரித்தாகவும், பசியாக வந்தவர்களுக்கு விருந்து அளித்ததாகவும் குறிப்புகள் உள்ளன. ஆனால் பண்டைய காலங்களில் பட்டாசு வெடித்து கொண்டதற்கான ஆதாரங்கள் இல்லை. வெடி வெடிக்கும் பழக்கம், சந்தோஷத்தை குறிப்பதற்காக ஆரம்பித்திருக்கலாம் என நம்பப்படுகிறது.**

*தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்வதற்கு காரணம், அன்றைய தினம், அதிகாலையில் எல்லா இடங்களிலும், தண்ணீரில் கங்கையும், எண்ணெயில் லட்சுமியும் அரப்பில் சரஸ்வதியும், குங்குமத்தில் கௌரியும், சந்தனத்தில் பூமாதேவியும், புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாக கருதப்படுவதேயாகும்.. அன்றைய தினம், எல்லா நதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகளிலும், நீர்நிலைகளும் "கங்கா தேவி" வியாபித்து இருப்பதாக ஐதீகம். அடிப்படையில் இந்துப் பண்டிகையாய் இருந்தாலும், சாதி மத வேறுபாடின்றி அனைவரும் ஒற்றுமையாய் கொண்டாடும் பண்டிகை தீபாவளி.*

*தீபஒளித் திருநாளன்று பட்டாசு, மத்தாப்பூ கொளுத்துவது மக்களின் வாடிக்கை. ஆனால் பறவைகளின் நலன் கருதி வேடந்தாங்கல் உள்ளிட்ட சரணாலயப் பகுதிகளில் வாழும் மக்கள் அவ்வழக்கத்தை தடை செய்து பட்டாசு இல்லா திருநாளாகக் கொண்டாடி வருகின்றனர்.*



**எஸ். சூர்யா**
STD VII-B
SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL
CHENNAI

**மித்ரா டைம்ஸ் மாத இதழ் சார்பாக வாசகர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்**

*சுஜாதா மூர்த்தி*

# ஆடு ஆடு ஜமுனாபாரி ஆடு



ஜமுனாபாரி ஆடு என்பது இந்தியா, வங்காளதேசம், பாக்கித்தான் நாடுகளைத் தாயகமாகக் கொண்ட ஓர் ஆட்டினம். இந்த ஆடு இறைச்சிக்காகவும் பாலுக்காகவும் வளர்க்கப்படுகிறது. 1953ஆம் ஆண்டு முதல் இந்தோனேசியா நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆட்டின் பெயர் உத்திரப்பிரதேசத்தில் உள்ள ஜமுனா பார் என்று ஆற்றின் பெயரிலிருந்து உருவானதாகக் குறிப்பிடப்படுகிறது.

தோற்றம் ;

பொதுவாக ஜமுனாபாரி ஆடுகள் வெண்மை நிறத்திலும் கழுத்து, தலைப்பகுதிகளில் பழுப்பாகவும் இருக்கும். இவற்றின் மூக்கு கிளி போல் வளைந்திருக்கும். காதுகள் நீளமாகவும் தொங்கிக்கொண்டும் இருக்கும். இவற்றின் கால்களும் நீண்டவை.

பாலமேடு: பணம் கொட்டும் "ஜமுனாபாரி' ஆடு வளர்ப்பில் மதுரை விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். 80 கிலோ எடையுள்ள ஆட்டின் அதிகபட்ச விலை 50 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. பாகிஸ்தானைபூர்வீகமாக கொண்ட ஜமுனாபாரி ஆட்டின் காதின் நீளம் ஒரு அடி; 10 இஞ்ச் அகலம். அழகான தோற்றம் கொண்டது. ஆண், ஆடுகள் ஐந்தடி உயரமும், பெண், ஆடுகள் நான்கடி உயரமும் சராசரியாக வளரக்கூடியது.வளர்ந்த ஆட்டின் எடை 80 கிலோ இருக்கும். ஆட்டின் கறி, மிருதுவாகவும், அதிக சுவையுடன் இருப்பதால் மாமிச பிரியர்களுக்கு ஜமுனாபாரி வரப்பிரசாதகமாக கருதப்படுகிறது.

ஜமுனா பிரியாணி: முன்னணி அசைவ உணவகங்களில் வான்கோழி பிரியாணிக்கு தனி மவுசு உண்டு. இவ்வரிசையில் ஜமுனாபாரியும் இடம் பிடித்துள்ளது. முன்னணி அசைவ உணவகங்களில் ஜமுனாபாரி மாமிச வகைகளும் இடம் பெறுகிறது. ஒரு கிலோதனிக்கறி 500 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கறியை விலைக்கு வாங்குவதை விட ஆட்டுக்குட்டிகளை விவசாயிகளிடம் கொடுத்து வளர்ப்போருக்கு அதிக லாபம் கிடைக்கிறது. மதுரையில் அலங்காநல்லூர், பாலமேடுபகுதியில் ஜமுனாபாரி ஆடு வளர்ப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

ஏற்றுமதிக்கு உகந்தது: ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா, ஹாங்காங், தைவான் மற்றும் அரேபிய நாடுகளுக்கு பதப்படுத்தப்பட்டஜமுனா ஆட்டுக்கறி ஏற்றுமதி செய்யப்படுகிறது. மதுரையில் வளர்க்கப்படும் ஆடுகள், சென்னை சைதாப்பேட்டைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அங்கு ஆட்டின் கறியை பதப்படுத்தி "டின்'களில் அடைத்து ஏற்றுமதிசெய்கின்றனர். பண்டிகை காலங்களில் கறியும், பாலும் முக்கிய பங்கு வகிக்கிறது. பாலில் அதிக புரதச்சத்து இருப்பதால் குழந்தைகளுக்கு நன்கு காய்ச்சிய பாலை கொடுத்து வந்தால், குழந்தை ஆரோக்கியமாகவும்,நோய் எதிர்ப்பு சக்தி மிக்கதாகவும் வளரும் என விவசாயிகள் கூறுகின்றனர்.

அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே

**- திருமந்திரம்**

**பொருள் :** அந்தணராவோர் தம் தவமாகிய இறைவனை எண்ணும் கருமத்தைச் செய்து பிறவியை அறுப்பவராவர்.

# இட்லிகளில் இத்தனை வகைகளா?



இட்லி

அரிசி மற்றும் உளுந்தை அரைக்கும் பாரம்பரிய அரவை இயந்திரம். இட்லி சுமார் 700 ஆண்டுகளாக இந்தியாவில் அறியப்பட்டு வந்த ஒரு உணவு பதார்த்தம் ஆகும். எனினும் இது பற்றிய தெளிவான ஒரு வரலாறு கிடைக்கவில்லை. இட்லியின் பண்டையகால பெயர் இட்டரிக என்பதாகும்.

இட்லியில் பலவிதமான வகைகள் உண்டு. அவற்றில் சில:

செட்டிநாடு இட்லி, மங்களூர் இட்லி, காஞ்சிபுரம் இட்லி, ரவா இட்லி, சவ்வரிசி இட்லி, சேமியா இட்லி, சாம்பார் இட்லி, குஷ்பு இட்லி கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மாவட்டத்தில் இது முக்கியத்துவமுடையது.

ஃபோர்ட்டின் இட்லி (fourteen idly) சின்ன சின்னதாக 14 இட்லிகள், ஒரு தட்டிலோ அல்லது கிண்ணத்திலோ சாம்பார் நிரப்பப்பட்டு பரிமாறப்படும்.

சாம்பார் இட்லி ஒரு தட்டிலோ அல்லது கிண்ணத்திலோ சாம்பார் நிரப்பப்பட்டு பரிமாறப்படும்.

ஒரு பங்கு உளுத்தம்பருப்புக்கு நான்கு பங்கு அரிசி அல்லது அரிசி அளவில் நான்கில் ஒரு பங்கு உளுத்தம்பருப்பு என்பது கணக்கு. உளுத்தம்பருப்பு புதிதாக இருப்பின் சிறிது குறைத்தும் போடலாம்.

அரிசியையும் உளுத்தம்பருப்புவையும் தனித்தனியாக ஊறவைக்கவும். சுமார் 3 மணிநேரம் ஊறவைக்கவும். முழு உளுத்தம்பருப்பாக இருப்பின் ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரம் போதுமானது.

அரிசியையும், உளுத்தம்பருப்பினையும் தனித்தனியாக அரைத்துக்கொள்ளவும். கெட்டியாக வெண்ணெய் பதத்தில் இருக்குமாறு அரைத்துக்கொள்ளவும்.

பிறகு, இரண்டு மாவினையும் ஒன்றாகக் கலந்து, தேவையான அளவு உப்பு சேர்த்து சுமார் 3 மணி நேரம் புளிக்க விடவும்.

இட்லிக்கு 3 அல்லது 4 மணிநேரம் புளிக்க வைத்தலே போதுமானது என்றாலும், பலர் முதல்நாள் இரவே மாவினை அரைத்து வைத்து மறுநாள் காலை பயன்படுத்துகின்றனர்.

புளித்த மாவினை இட்லிதட்டில் ஊற்றி, வேகவைத்து எடுக்கவும். வேகவைக்கும் நேரம் நாம் பயன்படுத்தும் உபகரணத்தினைப் பொறுத்து வேறுபடும்.

இட்லிச் சட்டி

இட்டலித் தட்டும் இட்டலிக் கொப்பரையும். இட்டலிக் கொப்பரையில் நீரிட்டு அந்த நீராவியில் வேகும் இட்டலி மாவு இட்டலியாகின்றது.

இட்லி செய்ய அதற்கென வடிவமைக்கப்பட்ட சட்டி தேவை ஆகும். வட்ட வடிவத்தில் குழிகள் கொண்ட தட்டுக்களை கொண்ட, நீர் ஆவி மூலம் வேக வைக்க என தயாரிக்கப்பட்ட சட்டி, அதற்கான மூடி ஆகியவைகளைக் கொண்டது இட்லி சட்டி.





# நஞ்சற்ற உணவே நோயற்ற வாழ்வு

## இரத்த மூலம் முற்றிலும் குணமாக

### வாழைப்பழமும் சீரகமும் கலந்து சாப்பிடுங்கள்



நாம் சமையலறையில் ஒரு மருத்துவமனையை வைத்துக்கொண்டு நாம் ஏன் வீட்டை விட்டு தொலைதூரத்தில் இருக்கும் மருத்துவமனைக்கு செல்கிறோம் என்றுதான் தெரியவில்லை.

சீரகம் நமக்கு எளிதாக கிடைக்கக்கூடிய பொருள். வாழைப்பழம், எந்த பருவகாலத்திலும் கிடைக்கக் கூடிய எளிய பழம்.

மஞ்சள் வாழைப்பழத்தின் மேல்தோலை உரித்து அப்பழத்துடன் கொஞ்சம் சீரகத்தை சேர்த்து நன்றாக பிசைந்து காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டால் ரத்த மூலம் முற்றிலும் குணமாகும். மேலும் இந்த இரண்டையும் கலந்து சாப்பிட்டால், உடலில் இருக்கும் தேவையற்ற கெட்டகொழுப்புக்கள் கரைந்து உடல் எடை குறைந்து ஆரோக்கியம் மேலோங்கும்.

## ஊற வைத்த வெண்டைக்காய் நீர் - இன்சுலின் மருந்து

*இரவில் ஊற வைத்த வெண்டைக்காய் நீரைப் பருகுவதால் கிடைக்கும் நன்மைகளைப் பற்றி உங்களுக்கு தெரியுமா? சமீப காலமாக சர்க்கரை நோயினால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*இதற்கு ஏராளமான காரணங்கள் உள்ளன. ஒருவருக்கு சர்க்கரை நோய் வந்துவிட்டால், அதற்கு வாழ்நாள் முழுவதும் இன்சுலின் ஊசியை எடுத்து வர வேண்டியிருக்கும். மேலும் ஒருவருக்கு சர்க்கரை நோய் வந்துவிட்டால், அதனால் வேறுசில உடல்நல பிரச்சனைகளும் தானாக வந்துவிடும். எனவே சர்க்கரை நோய் இருந்தால், அதனை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும். சர்க்கரை நோய்க்கு ஓர் அற்புதமான இயற்கை மருந்து ஒன்று உள்ளது. அம்மருந்து சர்க்கரை நோயுடன் வேறுபல பிரச்சனைகளையும் குணமாக்கும் சக்தி கொண்டது.எனவே வெண்டைக்காயை இரவே குளிர்ந்த நீரில் ஊற வைத்து விட்டு காலையில் அந்நீரை குடித்து வர பலன் கிடைக்கும் வாரத்தில் 2 நாட்கள் போதும்.*

தூக்கம் எப்போது குறைய ஆரம்பிக்கிறதோ அப்போதுதான் வாழ்க்கை ஆரம்பிக்கிறது.

# மாதுளையே...!



இன்றைய காலத்தில் குழந்தைகள் ஆரோக்கியமான உணவுகளான பழங்கள், காய்கறிகளை விரும்பி சாப்பிடுவதை விட, ஜங்க் உணவுகளைத் தான் அதிகம் விரும்புகிறார்கள். இதனால் குழந்தைகளுக்கு வேண்டிய சத்துக்கள் கிடைக்காமல், பல குழந்தைகளுக்கு **ஊட்டச்சத்துக் குறைபாடுகள்** ஏற்படுகின்றன.

ஆகவே குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்த ஒவ்வொரு பெற்றோரும் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைக் கொண்டு வர வேண்டியது அவசியம். அதில் தினமும் ஏதேனும் ஒரு பழத்தை கட்டாயம் உட்கொள்ள வேண்டும் என்ற பழக்கத்தைக் கொண்டு வருவதன் மூலம், அவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம்.

இன்றைய காலத்தில் குழந்தைகள் ஆரோக்கியமான உணவுகளான பழங்கள், காய்கறிகளை விரும்பி சாப்பிடுவதை விட, ஜங்க் உணவுகளைத் தான் அதிகம் விரும்புகிறார்கள். இதனால் குழந்தைகளுக்கு வேண்டிய சத்துக்கள் கிடைக்காமல், பல குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. ஆகவே குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்த ஒவ்வொரு பெற்றோரும் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைக் கொண்டு வர வேண்டியது அவசியம். அதில் தினமும் ஏதேனும் ஒரு பழத்தை கட்டாயம் உட்கொள்ள வேண்டும் என்ற பழக்கத்தைக் கொண்டு வருவதன் மூலம், அவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தலாம்.

# பாசிப்பயறில் உள்ள பசுமையான நன்மைகள்



பண்டைய காலம் முதலே இது இந்தியாவில் விளைவிக்கப்பட்டு வந்துள்ளது. இதன்பின்னர் தெற்கு சீனா, இந்தோ சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த நூற்றாண்டுகளில்தான் மேற்கு இந்திய தீவுகள், அமெரிக்கா போன்ற நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டு விளைவிக்கப்படுகிறது.

**பாசிப்பயறில் உள்ள சத்துக்கள்**

இதில் அதிக அளவு கால்சியமும், பாஸ்பரசும் அடங்கியுள்ளது. புரதம், கார்போஹைடிரேட், சிறிதளவு இரும்புச்சத்தும் அடங்கியுள்ளது. நார்ச்சத்தும், தாதுப்பொருட்களும் இதில் அடங்கியுள்ளன.

**கர்ப்பிணிகளுக்கு ஏற்றது**

கர்ப்பகாலத்தில் தாய்மார்களுக்கு வேகவைத்த பாசிப்பயிறை கொடுக்கலாம். எளிதில் ஜீரணமாகும். சத்துக்கள் நேரடியாக கருவில் உள்ள குழந்தைக்கு சென்று சேரும். குழந்தைகளுக்கும், வளர் இளம் பருவத்தினருக்கும் பாசிப்பருப்பு சிறந்த ஊட்டச்சத்து உணவு என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். வயிறுக்கோளாறுகள் இருப்பவர்கள் பாசிப்பயிறு வேகவைத்த தண்ணீரை சூப் போல அருந்தலாம்.

**காய்ச்சல் குணமாகும்**

சின்னம்மை, பெரியம்மை தாக்கியவர்களுக்கு பாசிப்பயிரை ஊறவைத்த தண்ணீரை அருந்த கொடுக்கலாம். அதேபோல் காலரா, மலேரியா, டைபாய்டு போன்ற நோய்களை குணமாக்குவதில் பாசிப்பயறு சிறந்த மருந்துப் பொருளாக பயன்படுகிறது.

**நினைவுத் திறன் கூடும்**

மனத்தக்காளி கீரையோடு பாசிப்பருப்பையும் சேர்த்து மசியல் செய்து அருந்தினால் வெயில் கால உஷ்ணக் கோளாறுகள் குணமடையும். குறிப்பாக ஆசன வாய்க் கடுப்பு, மூலம் போன்ற நோய்களுக்கு இது சிறந்த மருந்தாகும்.

பாசிப்பருப்பை அரிசியோடு பொங்கல் செய்து சாப்பிட்டால் பித்தமும், மலச்சிக்கலும் குணமாகும். பாசிப்பருப்பை வல்லாரை கீரையுடன் சமைத்து உண்டால் நினைவுத்திறன் அதிகரிக்கும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

**அழகு சாதனப்பொருள்**

குளிக்கும் போது சோப்பிற்கு பதிலாக பாசிப்பயறு மாவு தேய்த்துக்குளித்தால் சருமம் அழகாகும். தலைக்கு சீயக்காய் போல தேய்த்துக் குளித்தால் பொடுகுத் தொல்லை நீங்கும்.



மதிய உணவிற்கு பிறகு சுண்ணாம்புச் சத்து சேர்த்துக் கொள்ள வேண்டும். அது நாம் வெற்றிலை போடுவதன் மூலம் கிடைக்கும். அல்லது ஜீரண பொருட்களான சோம்பு, ஜீரக மிட்டாய் போன்றவைகளை எடுத்துக் கொள்ளலாம்.

அதில் தினமும் குழந்தைகள் சாப்பிட ஏற்ற ஒரு பழம் மாதுளை. இப்பழத்தை சாப்பிடுவதால், பல பிரச்சனைகளைத் தடுக்கலாம். இங்கு மாதுளையை தினமும் குழந்தைகளுக்கு கொடுப்பதால் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று கொடுக்கப்பட்டுள்ளது.

**செரிமான பிரச்சனைகள்** : உங்கள் குழந்தைக்கு ஏதேனும் செரிமான பிரச்சனை இருப்பின், இப்பழத்தை கொடுங்கள் விரைவில் குணமாகும்.

**குடல் புழுக்கள்** : குழந்தைகளுக்கு வயிற்றில் புழுக்கள் அதிகம் இருக்கும். இப்படி வயிற்றில் புழுக்கள் அதிகம் இருந்தால், அவர்கள் உட்கொள்ளும் உணவுகளை புழுக்கள் உறிஞ்சிவிடும். ஆனால் மாதுளை ஜூஸை அடிக்கடி கொடுப்பதன் மூலம், குடல் புழுக்களை அழித்து வெளியேற்றலாம்.

**காய்ச்சல் குணமாகும்** : மாதுளை ஜூஸ் காய்ச்சலைக் குணப்படுத்த உதவும். குறிப்பாக இதில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட் காய்ச்சல், சளி போன்றவை வருவதைத் தடுக்கும்.

**வாய் பிரச்சனைகள்** : அதில் உள்ள ஆன்டிவைரஸ் மற்றும் ஆன்டிபாக்டீரியல் பொருள் தான் காரணம்.

**கல்லீரல்** : மாதுளையை அடிக்கடி குழந்தைகளுக்கு கொடுப்பதனால், கல்லீரல் செயல்பாடு மேம்படும்.

**நல்ல பாதுகாப்பு** : மாதுளையில் பாக்டீரியா, நுண்ணுயிரிகள் மற்றும் அழற்சிகளை உண்டாக்கும் கிருமிகளை அழிக்கும் தன்மை உள்ளது. **ஆகவே இதனை குழந்தைகளுக்கு கொடுப்பதன் மூலம், அவர்களது உடலானது நோய்க்கிருமிகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கப்படும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதின் சிறப்பை உணர்ந்து நாம் நம் வருங்கால சந்ததியின் ஆரோக்கியம் பேணுவோம்.**

திருமதி. சுஜாதா மூர்த்தி

கால்களுக்கு நல்ல ரத்த ஓட்டம் தேவை. எனவே நடைபயிற்சியும் உடற்பயிற்சியும் செய்யுங்கள்.

Effects of Negative thoughts

The moment negative thought enters in your mind,

1 - Your body releases acid.
2 - Your aura decreases.
3 - Your resistance power decreases.
4 - Your system's functions are affected.
5 - Your heart beat increases.
6 - Your blood pressure increases.
7 - Unwanted hormones are released.

With that negative thought you may or may not harm others...but you definitely harm yourself!!!

Think positive remain healthy.

Seven Amazing Benefits of Clapping :

"Clapping" a Simple Striking of Hands but it's much more than you Think.

Normally People clap to Appreciate others for their Good works and achievements or when they are in mood of Joy.

People also Clap while Singing songs, Bhajans, and Prayers at Holy places.

It is Scientifically proved that Clapping is very effective Exercise to cure many Human Diseases.

Clapping activates the Receptors in the Palms and cause activation of the large area of the Brain which leads the improvement in Health.

There are 39 different Acupressure points for almost all Organs on our Palm which are activated by Clapping and this action improves Your Health slowly but effectively.

Daily 10-20 minutes of Clapping in morning keeps You Fit and Active.

1. Clapping is an effective Medicine for the Person who suffers from Digestive Disorder.
2. Best Cure for Back pain, Neck pain and Joint pain.
3. Gout is a common problem with Old age People and can be easily cured by Clapping.
4. Helpful for Patient of Low Blood Pressure.
5. If someone is suffering from any Heart and Lung related disease then Clapping plays important role in curing these diseases also.

Clapping removes the obstacles from the Main and Collateral Channels and keeps You Fit and Healthy.

6. Children that practice clapping exercise daily make only few Spelling mistake and are Hard worker than others.

It improves their Handwriting.

The whole abstract of above given points is, Clapping sharpen the Brain of the Children.

7. Clapping increase the Immunity of the Person which provides the Strength to the Human body to fight against Diseases.

*So clap clap clap*
*and* *retain* *your* *Health*

# EN-

# பெண்களுக்கு வேலைவாய்ப்புத் தரும் ஃபேஷன் டெக்னாலஜி!

**எழுத்தின் அளவு :**

பேஷன் என்றாலே அது ஆடைகள், துணி, டெக்ஸ்டைல், உடை போன்றவற்றுடன் தொடர்புடையது. இதனுடன் சேர்த்து நகை வடிவமைப்பு, அலங்காரம், லெதர் பொருட்கள், புகைப்படம், மாடலிங் போன்ற துறைகளும் பாஷன் டிசைனிங்குடன் நெருங்கிய தொடர்புடையவை.

இத்துறைக்கு மிகுந்த அழகுணர்ச்சியும், புதிய சிந்தனைகளை உருவாக்கும் எண்ணமும், திறமையும் அத்தியாவசிய குணங்களாகக் கருதப் படுகிறது.

மாறிவரும் இந்தியப் பொருளாதார மற்றும் சமூக சூழ்நிலை காரணமாக இன்றைய இளைஞர்கள் இத்துறைக்குக் காட்டும் ஈடுபாடு



பெரிதும் அதிகரித்துள்ளதுடன் இத்துறைக்கான வாய்ப்புகளும் மிகப்பிரகாசமாகவே இருக்கிறது. உலகெங்கும் இந்திய பட்டு, கைத்தறி, பளிச்சென்ற வண்ணங்கள் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் உள்ளது. இதனால் பாஷன் டிசைனிங் துறையில் இந்தியா உலகின் ஒரு மிக முக்கிய அங்கமாகத் திகழ்கிறது.

**ஆடை வடிவமைப்பு ;**

பேஷன் டிசைனிங்கின் மிக முக்கியமான பிரிவாகக் கருதப்படும் ஆடை வடிவமைப்பில் ஆடைகளை வடிவமைத்தல், துணிகளை வெட்டுதல், வெட்டிய துணிகளை தைத்தல், வடிவமைக்கப்பட்ட ஆடைகளை வணிகத்திற் கேற்றபடி தயார் செய்தல் போன்ற முக்கியப் பணிகள் உள்ளன. உற்பத்தி செய்த ஆடைகள் பாஷன் ஷோக்களின் மூலமாகவும் விளம்பரம் மற்றும் குறிப்புகளின் மூலமாகவும் மார்க்கெட்டிங் செய்யப்படுகிறது.

பாஷன் என்பது இன்று அந்தஸ்தின் சின்னமாக இருப்பதோடு சமூக ஈடுபாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது. இன்று இந்தியாவின் ஆடைகளுக்கு உலகெங்குமுள்ள ஆர்வம் இந்த பாஷன் டிசைனர்களால் தான் ஏற்பட்டுள்ளது.

**துறையில் வளர என்ன தேவை?**

பாஷன் டிசைனர்களாக விரும்புபவர்கள் கலா ரசனையுடையவர்களாகவும் சுய சிந்தனையுடன் புதிய வடிவங்களை உருவாக்குபவர்களாகவும் இருக்க வேண்டும். புதிய வண்ணங்கள், தீற்றல்கள் மற்றும் ரகங்களை இணைக்கும் திறமைகளும் இருக்க வேண்டும். நல்ல கற்பனை சக்தியும் வடிவங்களை கற்பனையிலேயே உருவகப்படுத்திக் காணும் திறனும் இருந்தால் இத்துறையில் சிறந்து விளங்க முடியும்.

மேலும் சந்தையின் தேவைகளை அறிந்திருப்பதும் பாஷன் பற்றிய பரந்த விழிப்புணர்வும் கட்டாயம் தேவை. பன்னாட்டு இதழ்களைப் படிப்பது, வரலாறு மற்றும் கலை ஈடுபாடு போன்ற பண்புகளும் இருக்க வேண்டும். கலாச்சார மையங்களுக்குச் செல்லுதல், பாஷன் கண்காட்சிகளைப் பார்வையிடுதல் ஆகியவை நம் திறன்களை வளர்க்கும்.

துணிகளின் தன்மையை வேறுபடுத்திப் பார்க்கும் ஆற்றலும் துணித் தேர்வு போன்ற திறன்களை கூடுதலாக வளர்த்துக் கொள்ள வேண்டும். நாமே உருவாக்கும் சுய மாதிரிகளும் கண்டுபிடிப்புகளும் துறையில் நம்மை மிளிரச் செய்யும்.

**துறைப் பிரிவுகள்**

டிசைனிங் பிரிவில் டிசைனர்கள், கட்டிங் அசிஸ்டண்ட், ஸ்கெட்சிங் அசிஸ்டண்ட், ஜூனியர் டிசைனர்களின் உதவியுடன் அதிக அளவு ஆடைகள் சந்தைத் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப் படுகின்றன.

மார்க்கெட்டிங் மற்றும் மெர்க்கண்டைசிங் பிரிவில் சந்தையின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட ஆடைகள் விற்பனைக்கு தயாராகின்றன. அன்றாட பாஷன் மாறுதல்கள்



பற்றி தெளிவாக அறிந்திருப்பது இதற்கு அவசியம்.

உற்பத்திப் பிரிவானது தேவைப்படும் அளவு மற்றும் தரத்தை உறுதி செய்கின்றன.

பாஷன் கோ ஆர்டினேட்டர்கள் விற்பவர்களையும் வாங்குபவர்களையும் ஒருங்கிணைக்கும் பணிகளைச் செய்கிறார்கள். துணித் தன்மை பற்றியும் வடிவமைப்பு பற்றியுமான ஆலோசனைகளை இந்தப் பிரிவினர் தருகிறார்கள்.

### துறையின் எதிர்காலம் எப்படி?

இத்துறையின் வடிவமைப்புப் பிரிவு படிப்பை சிறப்புத் திறன்களுடன் முடிப்பவருக்கு பின்வரும் இடங்களில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கின்றன.

ஆடை, துணி, கைத்தறி ஏற்றுமதி நிறுவனங்கள் விளையாட்டு மற்றும் கேசுவல் ஆடைகளை விற்பனை செய்யும் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிறுவனங்கள் அரசுத் துறையில் இயங்கும் கைத்தறி/டெக்ஸ்டைல் நிறுவனங்கள் பாஷன் மேளாக்களை நடத்தும் நிறுவனங்கள் 'டிவி' மற்றும் சினிமாத் துறையில் நிகழ்ச்சித் தயாரிப்பு, காஸ்ட்யூம் டிசைனர் ஆகிய ஒருங்கிணைப்புப் பணியில் வாய்ப்புகள் உள்ளன.

### சம்பளம் எப்படி?

தனிப்பட்ட ஒருவரின் திறமையைப் பொறுத்தே ஊதியம் கிடைக்கிறது. புதிதாக பட்டப்படிப்பு முடிப்பவர் 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையில் சம்பளம் பெறுகிறார்கள். பேப்ரிக் டிசைனிங் துறைக்குத் தேவைப்படும் திறனாளர்கள் அதிகமாக இருக்கிறது.

### ஆக்சஸரி டிசைன்

ஆடைகளுடன் தொடர்புடைய லெதர் பொருட்கள், காலணிகள், கிப்ட்வேர், டேபிள்சேர், விலையுயர்ந்த அலங்கார நகைகள் போன்றவற்றை ஆக்சஸரி டிசைன் எனக் கூறுகிறார்கள். இது பேஷன் துறையின் முக்கிய அங்கமாகும்.

### மாடலிங் மற்றும் அழகுக் கலை:

உலக அழகிகளை அதிக எண்ணிக்கையில் இந்தியா தரத் துவங்கியபின் இது அதிக புகழ் பெற்ற துறையாக விளங்குகிறது. டிசைனர், நடனப் பயிற்சியாளர், ஹேர்ஸ்டைலிஸ்ட், பல் மருத்துவர், டயட்டீசியன் ஆகியோர் இணைந்து இத் துறையில் செயல்படுகின்றனர். திறன் வளர்க்க இப் பிரிவில் ஏராளமாக செலவு செய்ய வேண்டியுள்ளது.

### பேஷன் போட்டோகிராபர் ;

பாஷன் டிசைனிங்கின் புதிய அங்கமாக மாறியுள்ள இப் பிரிவில் திறன் பெற்று வளர்ந்துள்ள ஒருவர் சாதாரணமாக நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை சம்பாதிக்க முடிகிறது.

### சேரும் முறை ;

நிப்ட் போன்ற புகழ் பெற்ற நிறுவனங்களில் இத் துறை படிப்பைப் படிக்க அகில இந்திய அளவிலான போட்டித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. குழு விவாதம், குழுத் திறன் போன்ற முறைகளும் கூடுதலாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. மிகக் கடுமையான போட்டியை உள்ளடக்கியதாக நிப்ட் படிப்புகள் இருக்கின்றன. தற்போது இந்தத் துறைப் படிப்புகளைத் தரும் நிறுவனங்கள் அதிகரித்து வருகின்றன.



# எழில் கொஞ்சும் பிச்சாவரம்

**கொள்ளிடம் மற்றும் வெள்ளாறு** நதிகள் வங்காள விரிகுடாவில் கலக்கும் முகத்துவாரப் பகுதியில், பெரும் நிலப்பரப்பில் அடர்ந்து வளர்ந்திருக்கும் சதுப்பு நிலக் காடுகள் பிச்சாவரம் என்ற பெயரில் புகழ்பெற்று விளங்குகின்றன.

கடலருகே உள்ள கழிமுகப்பகுதியில் உப்பு நீரில் குறைந்த ஆழத்தில் வேர்களை உறுதியாக ஊன்றி அடர்ந்து வளரும் தாவரங்களே சதுப்பு நிலக்காடுகள் எனப்படுகின்றன.

நீர்ப்பரப்பின் மேல் ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் தழைத்திருக்கும் இந்த காடுகள், தமிழ்நாட்டில் சிதம்பரத்துக்கு அருகே அமைந்திருக்கின்றன.

பிச்சாவரம் சதுப்புநிலக்காடுகள் அழகிய மரகதப்பச்சை நிறத்தில், நீரின் மீது மிதப்பதைப் போன்ற தோற்றத்துடன் பல எழில் மிகு தீவுகளாக உருவாகியுள்ளன.

பிச்சாவரம் பல அரிய வகைத் தாவரங்கள், பிராணிகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றின் உறைவிடமாக விளங்குகிறது.

செங்குத்தான வேர்களுடன், நீரிலிருந்து வெளியே தலை நீட்டுவது போல் வளர்ந்திருக்கும் ரிஸோபோரா மற்றும் அவிஸேனியா போன்றவை



இங்குள்ள அரியவகைத் தாவரங்களில் சில உப்புத் துகள்களை இலைகளில் தாங்கி நிற்கும் அபூர்வமான தாவர வகைகளும் இங்கு காணக்கிடைக்கின்றன.

இந்த தாவரங்களைச் சுற்றி நண்டுகள் ஓடுவதும், மீன்கள் தாவி விளையாடுவதும் இங்கே பார்வைக்கு விருந்தாகத் தெரியும் காட்சிகளாகம்.

பலவகைப் பறவை இனங்களும் பிச்சாவரத்தைவாழ்விடமாகக்கொண்டுள்ளன. தவிர, இந்தியாவின் பிற பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பறந்து வந்து தங்கிச் செல்லும் பறவைகளுக்காகவும் பிச்சாவரம் புகழ் பெற்றதாகும்.

செப்டம்பரிலிருந்து ஏப்ரல் வரை பலவகையான கொக்குகள், நாரைகள், மீன்கொத்திப் பறவைகள் உள்பட நூற்றெழுபத்தேழு பறவை இனங்களை இங்கு காணலாம்.

அதிகளவில் கிடைக்கும் இரைகளும், ஓடைகள், கால்வாய்கள் போன்ற நீர் நிலைகளும், பறவைகள் மட்டுமின்றி, மிருகங்களும் பிச்சாவரத்தை தங்கள் வாழ்விடமாகத் தேர்வு செய்வதற்குப் பெரிதும் துணை புரிகின்றன. பிச்சாவரத்தை உல்லாசமாகச் சுற்றிப் பார்த்து அனுபவிப்பதற்காக இயந்திரப் படகுகளையும், துடுப்புப் படகுகளையும், உப்பங்கழி படகுப் பயணங்களையும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை ஏற்பாடு செய்துள்ளது.





குறுகலான நீரோடைகள் வழியாகப் படகில் செல்லும் நேரத்தில், சூரிய ஒளி ஊடுருவ இயலாத வண்ணம் இயற்கை வேய்ந்திருக்கும் தாவரங்களின் அடர்பச்சைப் பந்தல்களைக் காணும்போது, பூமியில்தான் இருக்கிறோமா? அல்லது ஏதோ ஒரு மாய உலகில் கால் பதித்து விட்டோமா என்ற ஆனந்த ஐயம் நம் மனதில் எழும்.

தண்ணீரின் ஆழம் மூன்றடி மட்டுமே இருந்தாலும், நீருக்கடியில் சேறும், சகதியும் நிறைந்திருப்பதால் இங்கே நீருக்குள் இறங்குவது ஆபத்தானது. எங்கும் நிறைந்திருக்கும் பசுமைக் காட்ள்க், வசீகரமான நீர்த்தடங்கள், நீல நிற உப்பங்க ழிகள், வெள்ளி மணற்பரப்புடன் நீண்ட கடற்கரைகள் போன்ற அழகிய சூழலில் இயற்கை அள்ளி வழங்கும் விருந்தை பிச்சாவரத்தில் நாம் ஆனந்தமாக அனுபவிக்கலாம்.

**பொதுமக்களுக்கு சிறப்பாக செயலாற்றுவதன் மூலம் தான் வகிக்கும் பதவிக்கும் அதனால் தமிழக அரசுக்கும் பெருமை தேடி தருகிற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளை பெருமைப்படுத்தும் தொடர்...**

**- ஆசிரியர்**

# ஐ.பி.எஸ்



சென்னை பெருநகர போலீஸ் கமிஷனர் ஜார்ஜ் மூன்றாவது முறையாக பொறுப்பேற்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கேரள மாநிலத்தில் திருவனந்தபுரத்தில் பிறந்தவர். 1984-ம் ஆண்டு பேத்ஜ் அதிகாரி ஆவார்.

போலீஸ் கமிஷனராக பொறுப்பேற்றவுடன் "சென்னை மக்களுக்கு சேவை செய்வதற்காக முதல்வர் மீண்டும் எனக்கு வாய்ப்பளித்துள்ளார் என்று கூறி பொறுப்பேற்றுள்ளார்."

சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, குற்றத்தடுப்பு மற்றும் போக்குவரத்து சீரமைப்பு ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். காவல்பணி அதிகரிக்கப்பட்டு ரோந்து பணி வளப்படுத்தப்படும். பொதுமக்களின் குறைகளை உடனக்குடன் நிவர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறுகிறார்.

ஏற்கனவே சென்னை கமிஷனராக இருந்தபோது போலீஸாருக்கான நவீன ரோந்து வாகனங்களை முதல்வரிடம் கேட்டு வாங்கி தந்தவர். சென்னை முக்கியப் பகுதிகளில் கண்காணிப்பு கேமராக்களைப் பொருத்தி குற்ற சதவிகிதத்தைக் குறைத்தவர்



என்பது குறிப்பிடத்ததக்கது. அன்றாடம் காலை 7 மணிக்கு போலீஸாருடன் அந்த மாவட்ட துணை கமிஷ்னர்களை ஒருங்கிணைத்து கவாத்து (எ) பரேடு பயிற்சியை மேற்கொள்ளும் திட்டத்தை துணிச்சலுடன் கொண்டு வந்தவர். அந்தந்த காவல்மாவட்ட துணை கமிஷனர்கள் தங்கள் பகுதியை காவல் மாவட்டத்தின் நிறை குறைகளை பூர்த்தி செய்ய லெவல்-2 அந்தஸ்தில் உள்ள உளவுத்துறை போலீஸாரை அவர்கள் தங்கள் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் நியமித்துக் கொள்ள உத்தரவிட்டார்.

சென்னை வணிக வளாகங்கள், நட்சத்திர ஹோட்டல்கள், வங்கி மேலாளர்கள் குடியிருப்பு பகுதிகள் ஆகியவற்றில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த வேண்டும் என்று கட்டாய உத்தரவிட்டுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற பிள்ளையார் சதுர்த்தி ஊர்வலத்தில் பாதுகாப்பு போட்டு தனி பாதையில் பிள்ளையார் ஊர்வலங்களை நடத்தும் வகையில் வழி ஏற்படுத்தி எந்தவித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் அமைதியாக நடத்திக் கொடுத்து அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

குற்றப்பின்னணியுள்ள ரவுகளை வேட்டையாடி குற்றங்களைத் தடுக்க முனைப்புக் காட்டி வருகிறார். காக்கிச் சட்டைக்கு ஓர் கம்பீரம் என்று சொன்னால் கமிஷனர் ஜார்ஜ் அவர்களை உதாரணமாக சொல்லலாம். அவர் முன்பு பதவியில் இருந்தபோது செய்த சாதனைகளை தொடரும் வகையில் மக்கள் எதிர்பார்க்கும் சில விஷயங்களை நாம் அவருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள், ஹோட்டல்கள் ஆகியவற்றில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருந்தாலும் அவை உடனுக்குடன் ஆய்வு செய்யப்படுவதில்லை. எப்போதாவது தவறு நேர்ந்தால் மட்டுமே அந்த கண்காணிப்பு கேமராவை போட்டுப் பார்க்கிறார்கள்.

அடுக்குமாடி குடியிருப்புகளில் முறையான பாதுகாப்பில்லாததால் சமூக விரோதிகள் உள்ளே புகுந்து போதைப் பொருட்களை அருந்துவதும் பெண்களை கேலி செய்வதும் தொடர்ந்து நடைபெறுகிறது. மேலும் ரவுடிசம் கட்டப்பஞ்சாயத்து ஆகியவையும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் முனைப்பு காட்டுவதை உணர்ந்தவர் என்ற முறையில் திரு.ஜார்ஜ் அவர்கள் பொதுமக்கள் எதிர்பார்க்கின்ற இத்தகைய செயல்களை செய்து முடித்து பொதுமக்களை காப்பாற்றுவார் என்று நம்புகிறோம்.

திரு.ஜார்ஜ் அவர்களின் பணி சிறக்க மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

# எம் பதில்கள்





# தொடரும் இந்து முன்னணியினர் கொலைகள்!



KRM
Home Makers Pvt Ltd

# KRM ENCLAVE




# சென்னை நெருக்கடியில் சிக்கித் தவிப்பவரா நீங்கள்?

சென்னை வளர்ந்துவிட்ட ஒரு நெருக்கடியான நகரம். எல்லா மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டங்களைச் சார்ந்த மக்கள் மட்டுமே வசிப்பார்கள். ஆனால் சென்னை மாவட்டத்தில் அனைத்து மாவட்ட மக்களும் வசிக்கிறார்கள். அதுபோல சுமார் 5,00,000 இலட்சம் பேர் தினந்தோறும் வேலையின் பொருட்டு சென்னை வந்து செல்கிறார்கள். திருவள்ளூர், வேலூர், காஞ்சிபுரம், தர்மபுரி, திருவண்ணாமலை என பல்வேறு வெளி மாவட்டங்களிலிருந்து தினந்தோறும் சென்னைக்கு வருகிறார்கள். இதுபோக தி.மு.க. ஆட்சியில் சென்னையில் தலைமைச் செயலகத்தை விரைந்து கட்டி முடிக்க வெளிமாநிலத்தைச் சார்ந்தவர்களை வேலைக்கு அழைத்து வந்தனர். அவர்கள் இங்கேயே தங்கி விட்டதாலும் அவர்களுடைய உறவினர்கள் தினந்தோறும் சென்னைக்கு படையெடுத்து வருவதாலும் சென்னை மாநகரம் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. விடுபட சென்னைக்கு புறநகரில் ஒரு பிளாட் வாங்குவதே சிறந்த வழி.

உங்களின் கனவு இல்லமாக நம்முடைய KRM Home Makers Pvt.Ltd., மூலமாக ஒரு பிளாட் வாங்கலாம். தொடர்புக்கு : 23743007/8

**E-mail : msmoorthy68@yahool.co.in** **Website : www.mitrahomemakers.com**

Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021.
Editor : M.SUNDARAMOORTHY.